Regd No. M. 4900. 16-பக்கங்கள்

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி ப-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 25-12-1948 சனிக்கிழமை } மலர் 16.

## கடமையைச் செய்! சளைக்காதே!

அடக்குமுறை எங்கே, எந்த வடிவிலிருந்தாலும்
அவற்றை நிமிர்ந்து நின்று சமாளி!

அமைதியும் ஒழுங்குமே உன் அணிகலன்கள்!

★



தந்தை பெரியாரவர்கள் 18—12—48ம் நாள் நள்ளிரவில் 2¼ மணிக்குக் குடந்தையில் கைதாக்கப்பட்ட போது நாட்டுமக்களுக்கு விடுத்த அறிக்கை:—

"பத்தாவது தடவையாக என்னை எனது நண்பர்களுடன் கைது செய்து சிறைப்படுத்தி அழைத்துச் செல்லப்படுகிறேன். இந்த நிலையில் நான் எனது மக்களுக்குச் சொல்லக் கூடிய தென்னவென்றால், இந்த நெருக்கடியான சமயத்தில் ஒவ்வொரு திராவிடனும், ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அவரவர் கடமையைச் செய்யவேண்டியது அவசியமாகும். சர்க்கார் அடக்குமுறை மூர்த்தன்யம் உதயமாகி விட்டது. இந்த அடக்குமுறை எங்கேயிருந்தாலும், எப்படியிருந்தாலும் அதைமுகங்கொடுத்து சமாளித்தால்தான் திராவிடர்களின் மானம் மேலும் பறி போகாமலிருக்க முடியும். அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் இல்லையே என்று சளைக்காதீர்கள்!

எந்த நிலையிலும் சமாதான பங்கம், ஒழுங்குத் தவறு ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்."

# ஆதிரைத் திருநாள் அறிவுடைமையா?

[✶]

கடவுள் பக்தர்களை—சைவ மெய்யன்பர்களை உய்விக்கும் நாள்—நந்தனார் என்னும் சிவ பக்தர், சிவனருளைப்பெறக் காத்திருந்து எதிர்பார்த்த—ஆண்டவனின் அருள் பாலித்த நாள். ஆம், அதுதான் சிவனடியார்களால் போற்றிப்புகழப்படும், மார்கழித்திருவாதிரைத் திருநாள்.

முழுமுதற் கடவுளென சைவர்களால் கூறப்படும் சிவபெருமான், காமக்குரோத, லோப, மோக, மத மாச்சர்ய டம்பங்களில் கிடந்துழலும் உயிர்களனைத்தையும், அவைகளின்றுமீட்டு, பேரின்ப வெள்ளமாகிய தன்னுள் இரண்டறக் கலக்கத்தெரிசனம்தரும் திருநாள்.

அந்நாளில் அம்பலக் கூத்தன் புரிந்த திருவிளையாடல்கள், விழாவில் நடக்கும் ஆனந்தத்தெரிசனங்கள்பற்றி ஒரு சிறிது கவனிப்போம்.

"சிவபெருமான் தன்சடைமேல் இருக்கும் கங்கையின்மேல் மோகங்கொண்டு கூடல் கொள்கிறார். இதையறிந்த சிவபெருமானின் மனைவி பார்வதி சிவபெருமான் மேல் கோபங்கொண்டு அவர் வெளியில்உலவிவிட்டு வரும்சமயம் வாசற் கதவைச்சாத்தித் தாளிட்டுக்கொள்கிறாள். பார்வதியின் செயலை அறிந்த சிவபெருமான் செய்வது புரியாது சித்தம் கலங்கி இருக்கையில், அவரின் தோழரான சுந்தரமூர்த்தி நாயனார் அவ்விடம் வருகிறார். வந்த தோழரை வரவேற்று அவரிடம் நடந்த சம்பவங்களைக் கூறி தான் இனிமேல் இப்படிப்பட்ட காரியங்களில் தலையிடுவதில்லை என்றும், மனைவியைச் சமாதானம் செய்து வைக்கும்படியும் கூறுகிறார். பின்னர், சுந்தரமூர்த்தி நாயனார் தூது சென்று இருவரையும் சமாதானம் செய்து வைக்கிறார்"

(இவை ஆண்டுதோறும் நடக்கும் இவ்விழாவின் போது, கலியுக (பேசும்) சுந்தரமூர்த்தி நாயனாராக, தூது செல்லும் "ஓதுவார்" அச்சமயத்தில் குறிப்பிடுவது) கங்கையிடம் கூடல் புரிந்ததற்கடையாளமாக, திருவாதிரை விழாவின் முதல் நாளிரவு, தேவதாசி (விலைமாதர்) யின் தெருவுக்கு சிவபெருமான் (நடராச உருவம்) சைவ மெய்யன்பர்களால் சுமக்கப்பட்டு வந்து சேருகிறார். தேவதாசியின் வீட்டிலிருந்து வாசனைத் திரவியங்களும், உண்டி உணவு வகைகளும், மேளவாத்தியம் முழங்க வந்து சேருகிறது. அவைகளை ஆண்டவனுக்கு அர்ப்பணித்தபின் தேவதாசி (கங்கை) யிடம் தான் கொண்ட கூடல், பிறருக்குத்தெரியாமலிருக்க மேளவாத்தியச் சத்தமின்றிச் செல்கிறார். மறுநாள் திருவாதிரையன்று, பார்வதிஇச்செய்தியறிந்து கதவைத்தாளிட, சிவபெருமான் சுந்தரமூர்த்தியிடம் கெஞ்ச, ஓதுவார், (சுந்தரமூர்த்திநாயனாரின் பின் சென்று அவருக்குப் பதிலாக) சமாதானம் செய்து வைத்ததும், பார்வதியும் பரமசிவனும், (சிவகாமவல்லி, நடராசர்) ஒன்று சேர்ந்து கோயிலுக்குள் கொண்டு செல்லப்படுகின்றனர்-இவை விழாவின் நிகழ்ச்சிகள்.

இனி இவைபற்றிச்சிறிது ஆராய்வோம். முதன் முதலாக நடைபெறும் நிகழ்ச்சி; கங்கை(தேவதாசி)யின் மேல் காமுற்று, அவள் வீட்டிற்குச் சென்று கூடி உணவு வகைகளை உண்டும், வாசனைத்திரவியங்களை உபயோகித்தும், பிறருக்குத்தான் செய்தது தெரியாமலிருக்க சத்தமின்றிச் செல்கிறார் அம்பலவாணன். தன்மனைவி பார்வதியிருக்க கங்கையின் மேல் ஆசைகொள்வானேன்? பார்வதியின் உடல், நோய்வாய்ப்பட்டு அதனால் சிவனாரின் காமத்தைத்தீர்த்து இன்பமளிக்க முடியவில்லையா? விழாவின் நிகழ்ச்சிகளில் இவைபற்றி எந்தக்குறிப்புகளும்இல்லை. எந்தக்காரணத்தாலோ கங்கையின் மேல் காமுறுகிறார். தன் மனைவி இருக்க, பிறமங்கையிடம் இன்பம் அனுபவிக்க விரும்புவதும், கண்ட கன்னியரின் கற்பழிக்க எண்ணுவதும் கயவனின் செயல் அல்லவா? அதுவும் அண்டபிண்டசராசரங்களையும், ஈரேழுபதினான்கு உலகங்களையும், படைத்ததாகக் கூறப்படும் கடவுளே, இப்படிச் செய்தால் அவரால் படைக்கப்பட்ட—படைக்கப்படும்! உயிர்களின் நடத்தை எப்படி இருக்கும்? மன்னன் எவ்வழியோ அவ்வழி மக்களும், என்ற நிலைதானே ஏற்படும். அன்னிய மாதருடன் கொஞ்சிக்குலாவி விட்டு கள்ளத்தனமாக இருப்பிடம் செல்வது தானா, ஒன்றின் மேல் விருப்பும் வெறுப்பும் இல்லாத ஆண்டவனின் தன்மை? உலகினுள்ள உயிர் வகைகளை, மண், பெண், பொன் என்ற மூவாசைகளின்று விடுவித்தருளி, பேரின்பமாகிய தன்னுள் இரண்டறக்கலக்க, தெரிசனம் தருவதாகச் சொல்லப்படும் கடவுளுக்கு, ஒரு மனைவியிருந்தும் பெண்ணாசை தீராது, வேறொரு மங்கை தேவைப்படுகிறதே! இவர் சீவராசிகளை, மாயையாகிய பெண்ணாசையினின்று மீட்டு அருள் பாலிப்பதென்பது எவ்வளவு பித்தலாட்டமானது. வேண்டுதல், வேண்டாமை இலான் எனப்படும் ஒருவருக்கு வைப்பாட்டி தேவையென்றால், இவரை காமி என்றழைப்பதா? அல்லது சாமியென்றழைப்பதா?

மனிதரில் விபசாரம் செய்யாமல் நல்லொழுக்கமுடன் வாழ்கிறார்களே பலர், அவர்கள் தம் மனைவிக்குத் துரோகஞ்செய்வதில்லை, அன்னியப்பெண்களுடன் இன்பமனுபவிப்பதில்லை, பிறருக்குத் தெரியாமல் கள்ள மனைவியின் வீட்டிலிருந்து சந்தடி செய்யாமல் திருட்டுத்தனமாக வருவதில்லை, தெரியாது அவள்மேல் ஆசை வைத்து விட்டேன், இனி இம்மாதிரிக் காரியங்களில் ஈடுபடுவதில்லையென்றும் சமாதானம் செய்து வைக்கும்படியும் தோழனிடம் சொல்வதில்லை.

இம் மனிதர்களைக்காட்டிலும், இக்கடவுளர்கள் எந்த முறையில் சிறந்தவர்கள். மனிதனுக்கு இருக்கும் அறிவு, நல்லொழுக்கங் கூட இல்லாத ஒருவனை, கடவுளென மொழிதல் எப்படிப் பொருந்தும்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)




காட்சி 12.

[சோலை]

உறுப்பினர்:-இராஜன், விமலா.

கதை அமைப்பு:-[இராஜன், விமலாவின் நன்மையைக்கருதி, அவளிடம் விஸ்வனையே மணந்து கொள்ளுமாறு சொல்லுகிறான்.]

விமலா:- [அழுது கொண்டே வருகிறாள்.]

இராஜன்:- விமலா! விமலா! என்ன நேர்ந்தது...! ஏன் அழுகிறாய்...?

விமலா:-அய்யோ...! என்னைத் தொடாதீர்கள்! உங்கள் பரிசுத்தமான கரத்தால் தீண்டத்தகாதவளாக ஆக்கப்பட்டு விட்டேன்...!! உங்கள் உள்ளத்தோடு உள்ளமாய் ஒட்டிக்கொண்டிருந்த எனதுள்ளத்தை என்னைப் பெற்றெடுத்த தந்தையே கொஞ்சமும் ஈவிரக்கமின்றி உடைத்து இரண்டாக்குகிறார் அந்தோ...!!!

இராஜன்:- ஆ...! விமலா!! அப்படிச் சொல்லாதே. அதைச் செய்ய உன் தந்தை இல்லை, உலகையாளும் சக்ரவர்த்தியின் சர்வாதிகாரத்தால்கூட முடியாது!!! நடந்ததை இன்னதென்று சொல்ல மாட்டாயா...!

விமலா:- நடந்ததா...? இந்த நாகரீக உலகத்தின் இருபதாவது நூற்றாண்டிலே, கேள்விப்பட்டால் கூட வெட்கப்படவேண்டிய கோரக்காட்சி! அய்யோ! பரத கண்டத்தின் பரம்பரைச் சொத்தாகப் பாதுகாக்கப்படுகின்றதே...! ஒரு பெண் தன் மனதுக்குகந்த மணாளனைத் தேர்ந்தெடுக்க முடியாத மூடத்தனம்! பெற்றோரின் பிடிவாதம்!! சோதிடக்காரனின் பித்தலாட்டம்!!! இவைகளால் ஏற்படும் பலாபலன்களுக்கு முடிவான பெயர் விதி? விதியெனும் பொய்ப்பெயர் சூடி வெம்பிவாடும் மதியற்ற குடும்பங்களின் எண்ணிக்கையோடு தன் குடும்பத்தையும் ஒன்றாகச் சேர்த்துக்கொள்வதற்காக என் தந்தை என்னை விஸ்வனுக்கே பலியிடத் தீர்மானித்து விட்டார்! அந்தோ!! நான் என் செய்வேன்...?

இராஜன்:-விமலா! இதற்காகவா இப்படி உள்ளம் உடைகிறாய்? இது இந்நாட்டில் சர்வசாதாரணமாக நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களில் ஒன்று என்று உனக்குத் தெரியாதா? எத்தனையோ காதலர்கள் நமக்குமுன் இக்கோரப் புயலில் சிக்கிச் சின்னாபின்னப்பட்டிருக்கின்றனர்! இப்போதும் சித்திரவதைப்பட்டுத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கின்றனர்!! இனியும் இப்படித்தான் இருப்பார்கள்!!! ஏனென்றால், நம் போன்ற காதலர்களின் கண்ணீரை நம்நாட்டுக்கவிஞனும், ஓவியக்காரனும் கண்ணெதிரே காண்கின்றனர்; கண்டும் கவிபாடுவதில்லை, ஓவியக்காரன் சித்திரம் வரைவதில்லை. இருவருமே கற்பனைக் கூற்றிற்கும் கைலாசத்திற்கும் தொண்டு செய்கின்றனர்! இத்தகைய நாடு உருப்படுமா? எந்தக் காலத்திலாவது இங்கே காதல் மணம் நடக்கத்தான் முடியுமா?

விமலா:-ஆம். முடியாது! எதிர்பார்க்கவே முடியாது!! என்னால், உம்மைப் பிரிந்து உயிர்தரிக்கவும் முடியாதே...!!!

இராஜன்:-விமலா! காதல் என்றால் என்ன...? மிருக இச்சைக்குப் பெயர் காதலா? நீ என் உள்ளத்தின் உள்ளே புகுந்து உறைகிறாய்! உன்னை அன்போடு நினைத்துக்கொண்டிருக்கவே நான் பல நூற்றாண்டுகள் வாழவும் விரும்புவேன்! அத்தகைய அன்பை அறியும் தன்மையில்தானே காதல் தத்துவம் அடங்கி இருக்கிறது? இது நீ உணரமுடியாத விசித்திரமல்லவே...!

விமலா:- அன்பரே! உமது உள்ளத்தின் பிரதிபிம்பம்தானே எனது உள்ளம்? என் உள்ளம் உம்மிடமும், உடலை விஸ்வனிடமும் ஒப்புவிப்பது விஸ்வனுக்குக்கூடத் துரோகம் செய்வது போலல்லவா இருக்கிறது...?

இராஜன்:-துரோகம் செய்வது போலென்ன? துரோகமேதான்! ஆனால், அதை நீ உன்மனதாரச் செய்யவில்லையே...? உன் தந்தையின் பிடிவாதம்! அவர் தாரத்தின் குரோதம்!! இவைகள் மட்டுமா? விஸ்வனுடைய மிருக இச்சையும், உன் தகப்பனாரின் சொத்தைஅபகரித்துக்கொள்ளவேண்டும் என்ற பேராசையுமல்லவா காரணங்களாக இருக்கின்றன?

விமலா:- இதற்கு நான் கட்டுப்படுவதைக்காட்டிலும் தற்கொலை செய்து கொள்ளலாமல்லவா?

இராஜன்:- ஆ...ங்? தற்கொலையா...?? நூகூம்...!—உம். அப்போது உன் உள்ளத்தைக்காப்பாற்றலாம்! ஆனால், விமலா! உன்உயிரை இழந்து விடுவாயே...? உயிரில்லாவிட்டால் உள்ளமேது? உணர்ச்சியேது? அந்தோ? உணர்ச்சி அற்ற பிணமாவதற்கோ தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறாய்? விமலா! உணர்ச்சியுள்ள உள்ளத்தோடு உயிரோடிருப்பது ஓரளவு இன்பமே அல்லவா...? காதலை உள்ளத்தாலேனும் அனுபவிக்க முடியுமே! ஆனால்...! நாம் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்க முடியாதுதான்...!! இறந்து போனாலோ? எண்ணமும், எண்ணுவதால் ஏற்படும் இன்பமும்கூட இருக்காதல்லவா...?

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

கதை. கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

# ராதையும்—சீதையும்.

போட்டி

என் 2.

திருநெல்வேலி.
1—10—48.

அன்பு!

ராதை!

வணக்கம். நலன். நலனறிய பேரவா. உனது இரண்டு கடிதங்களும் கிடைக்கப்பெற்றேன். நன்றி!

உனது முதல் கடிதம் கிடைத்த உடனேயே பதில் எழுதலாம் என நினைத்தேன்.

ஆனால் எண்ணமும், போக்கும் ஒரே விதத்தில் இருந்தால்தானே.

என் வாழ்க்கையில் வீசிய ஒரேபுயல் என் நிலையையே தலை கீழாக மாற்றி விட்டது.

இதன் காரணமாக உனக்கு கடிதம் எழுத நீண்ட நாள் ஆகியது குறித்துப் பெரிதும் வருந்துகின்றேன். என்ற போதிலும் என்பள்ளித்தோழி என்ற முறையில்; என்வாழ்க்கையில் ஏற்பட்ட புயலைப்பற்றிக்கூற முன் வருகின்றேன்.

"என்பிரிய ராதா"!

எனக்கு மணமான புதிதில் "ரதிக்கேற்ற மன்மதரடி-நீ கொடுத்துவைத்தவளடி" என்று என் கணவரைப்பற்றிப் பெருமையுடன் புகழுரை வழங்கினாய் எனக்கு.

நானும் முதலில் அது குறித்துப் பெருமைதானடைந்தேன்.

ஆனால்...?

நாட்கள் ஓடியது. என் நாயகர் என் மீது வைத்திருந்தபாசம் நாளாக ஆகத் தேய்ந்து கொண்டிருந்தது.

ராதை!

இந்த இடத்தில் உனக்கொரு செய்தியை ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

ராமாயணத்தில்-சீதை-என்ன முடிவை எய்தினாளோ அந்த நிலைக்குத்தான் இந்தச் சீதையும் கொண்டு வரப்பட்டாள் என்பதை ஞாபகத்திலிருத்தி என் கடிதம் முடிந்ததும் சிந்தனை செய்துபார். இரண்டும் ஒரே முடிவுதான் என்பதைப் பின்னர் உணர்வாய். நிற்க,

நாயகனின் நட்பு குறைந்துகொண்டிருப்பதைக்கண்ட நான் பாசத்தையும் நேசத்தையும் என்பதியிடம் பகிர்ந்தளித்தேன். ஒன்றுக்கும் அவர் அசைந்து கொடுக்கவில்லை.

இறுதியில் நானும் ஒரு முடிவிற்கு வந்தேன். அவரைப் போன்றே வாட்டமுடன் எப்பொழுதும் முகத்தை வைத்துக்கொள்வது என்ற முடிவுக்கு வந்து அதன்படியும் நடக்க ஆரம்பித்துவிட்டேன்.

நாட்கள் நகர்ந்தன.

ராமன் கதையில் இராவணன் சீதையைச் சிறை எடுத்ததைப்போன்று இந்தச் சீதையைச் சிறைவைக்க......

பக்கத்து வீட்டுப் பரந்தாமன் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

பரந்தாமன்-கல்லூரிமாணவன் மட்டுமல்ல, கன்னியர் உள்ளத்தையும் களவாடும் காருண்யன் என்பதை அவனது கடைக்கண் வீச்சே காட்டிற்று.

பலப்பல கூறுவானேன்.

பரந்தாமன் விரித்த பாசவலையில் வீழ்ந்தேன்.

"வேசி" என ஏசாதே! ராதா. நான் சென்ற பாதை பயங்கரமானது-ஆபத்தானது என்றாலும்......?

விளக்குடன் விளையாடும் விட்டிலுக்கு — விளக்கினால்தான் வினை என்று தெரிந்தும் — அத்துடன் கொஞ்சிக் குலவுகின்றது.

அதேபோல நானும் பரந்தாமனுடன் விளையாடி வந்தேன்.

ராமன் காதையில்:—இலங்கையில்-இராவணன் வசம் சிக்கலில்...? இருந்த சீதையை அனுமன் அறிந்து, ராமருக்கு, "கண்டேன் சீதையை" என்று கூறியதைப்போல—

பரந்தாமன் வசம் பரவசத்திலாழ்ந்திருந்த என் நிலையை-அடுத்த தெரு அண்ணாசாமி அய்யர் அனுமானாகத் தூது சென்று என் கணவரிடம் என் நிலையை விளக்கினார்.

இராவணனிடம் சீதையிருந்த செய்தி கேட்டதும் ராமர் திகைத்தாராம். அதேபோல இந்த என் ராமரும் திகைத்தார். இருவர் திகைப்பும் ஒரே பொருள் கொண்டுதான் எழுப்பப் பட்டதுபோலும்.

இராவணனிடமிருந்து சீதையை மீட்டு பின் நாடாண்டாராம், ராமர்.

அதேபோல...சிலநாளில் பரந்தாமன் பாசத்திலிருந்த என்னை மீட்டார். மீட்டு சில நாட்கள் வாழ்க்கையை வெறுப்புடன் நடத்தினார்.

இராவணனிடமிருந்த சீதை கர்ப்பிணியாக்கப்பட்டு அரண்மனையில் வாழ்வதை, குடிகள் வெறுக்கின்றனர் என்பதை அறிந்த ராஜாராமர், சீதையைத் தனியாக காட்டுக்கு அனுப்பி வைத்தாராம்.

இதேபோல...பரந்தாமனால் கருவூட்டப்பட்ட நான் பதியின் வீட்டில் இருப்பது பாபம் என்பதை அறிந்த என் ராஜாராமர் என்னை என் தாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

பரந்தாமனால் என் நெஞ்சத்தில் தீட்டப்பட்ட சித்திரம் என் அடிவயிற்றில் இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது.

என் பிரிய ராதை!

இப்பொழுது புரிகிறதா? இனி சிந்தனை செய்துபார்!

ராமாயணச் சீதைக்கும் இந்தச் சீதைக்கும் உள்ள வேறு பாட்டை.

கடிதம் நீண்டு விட்டது என்றாலும் ஒரு கருத்துடன் தாங்கிச் செல்கிறது என்ற அளவில் பெருமையடைகின்றேன்.

உன் அன்பான பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்

(பள்ளி தோழி)
—சீதை.

திருச்செங்கோடு,
7-10-48.

சிரோன்மணி-சீதை!

உன்கருத்தமைந்த கடிதம் கிடைத்தது. நன்றி-வணக்கம்.

உன் வாழ்க்கையில்தான் புயல் வீசுகிறதென எண்ணிக்கொண்டிருக்கிறாய் போலும்!

இங்கென்ன வாழ்கிறது.

எனக்கும் அதே நிலைதான்-இருவர் வாழ்வும், தோற்றத்தில்தான் வேறு. இறுதிக்கட்டம் இரண்டும் ஒன்றே தான்.

கோபியருடன்-கிருஷ்ணர் கூடி ஆடிப்பாடி விளையாடுவாரென பாரதத்தில் படிக்க—ப்க்கம் நின்று—கேட்டிருக்கின்றேன். ஆனால் அக்காட்சியை நான் நேரில் கண்டதில்லை. அதை இப்போது காணும் வாய்ப்பு எனக்கு கிடைத்து விட்டது.

ராதையின் கணவன் கிருஷ்ணன் கோபியருடன் சுற்றச் செல்வதுபோல என் கிருஷ்ணரும் கோபியர்களைத் தேடி-பார்க்குக்கும் சினிமாவிற்குமாகச் சுற்றியலைய ஆரம்பித்து விட்டார்.

நான் வீட்டிலில்லாத சமயம்—பக்கத்து வீட்டுப்—பர்வதங்கள் அவருடைய பரவசத்தில் ஆழ்ந்திருப்பர். வேலைக்காரி விசாலத்திலிருந்து-பூக்காரி—புவனா வரை என் கிருஷ்ணர் கோகுலாஷ்டமி கொண்டாடி விடுவார்.

ஆகவே.

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

## உரிமைப் போர்!

—(●)—

குடந்தை டிச. 19-

துவக்கம்.

உரிமைப் போரைத் துவக்கு விழாச் செய்வதில் ஊரான்வோர் தப்பினரே முந்தி வந்தனர். ஆரம்ப நாள், இன்று என்பதை அறிவிக்கக்கேட்டிருந்த அதிகார வர்க்கம், நேற்றிரவு நடுச்சாமத்தில் கைது செய்யும் பணியைத் துவக்கமாகத் துவக்கினர்.

கைதாக்கப்பட்டோர்.

1. தந்தை பெரியாரவர்கள்
2. தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் (மத்திய கழகத்துணைத்தலைவர்)
3. தோழர் பி. ஆர். பொன்னு சாமி அவர்கள்
4. வழக்கறிஞர் முத்துதனபால்,,
5. தோழர் எஸ். கே. சாமி ,,
6. தோழியர் மணியம்மை ,,

மணியம்மையாரைப் பின் உடனே விடுதலை செய்தனர். ஏனைய ஐவரும் 151வது செக்ஷன்படி கைதாக்கப்பட்டனர்.

முதல் நாள்.

தடையை மீறி ஊர்வலம் வந்த தோழர்கள்:—

1. எஸ். தனலட்சுமி
2. எம். கோவிந்தம்மாள்
3. பி. முனுசாமி
4. ஜி. வையாபுரி
5. எம். கோபால கிருஷ்ணன்
6. ஏ. வி. ரமணி
7. எம். சாமிநாதன்
8. எஸ். பக்கிரிசாமி
9. பி. கோவிந்தராஜ்.

போலீசார் வாயால் மிரட்டியும், தடிகொண்டு பயமுறுத்தியும் பயனில்லாது போகவே, அனைவரையும் வளைத்து ஸ்டேசனுக்குக் கொண்டு சென்றனர்.

இரண்டாம் நாள்.

## அதிகாரிகளின் மிருகச் செயல்.

குடந்தை டிச. 20-

இன்று சட்டமறுப்புச் செய்து ஊர்வலம் வந்த தோழர்கள்:—

1. கா. சிதம்பரம்
2. கே. கே. பானு
3. ஆர். ராஜாங்கம்
4. பி. ஏ. துரைராஜ்
5. தோழியர் புஷ்பவேணி
6. டி. பி. முத்து
7. பி. சாமிநாதன்
8. எம். எஸ். மணி
9. நூர்கான் சாகிப்
10. என். கிருஷ்ணன்

ஊர்வலம் வந்த தொண்டர்களை நிறுத்தி, முதலில் டெபுடி சூப்பிரண்டெண்ட் தடியடி கொடுத்துக் கட்டளையிட்டபின் போலீசார் தடியடி வேலையில் இறங்கினர். பூட்ஸாலும் உதைத்தனர். இவற்றால் தோழர்களான சிதம்பரத்திற்கும் துரைராசுக்கும் உயிர் நிலையில் பலத்த அடி, விலா எலும்பும் முறிந்தது. ராஜாங்கத்திற்குக் கழுத்தில் பலமான அடி. சாமிநாதன் முத்துசாமி ஆகியோருக்கு முதுகில் படுகாயம். நூர்கான், பானு, மணி, முத்து ஆகியோருக்கும் பலத்த அடிகள். தோழியர் புஷ்பவேணி அம்மையாரை ஒரு போலீஸ் அதிகாரி? கையைப் பிடித்து இழுத்துப் 'போ' என்று தள்ளினார். ஆனால் அம்மையார் சிறிதும் நகரவேயில்லை. பொது மக்களிலும் ஏ. இருதயசாமி வி. ராமானுஜம் ஆகிய இருவருக்கும் பலமான தடியடி. குடவாசல் சீனுவாசன் என்பவருக்கு மண்டையில் பலத்த அடி. ரத்தம் மிகுந்து வெளிப்பட அங்கேயே விழுந்து விட்டார். இவரையும் தடியடிக்குள்ளான ஆண் தொண்டர்கள் 9 பேரையும் லாரியில் ஏற்றிய போலீசார், தாராசுரம் வழியாகச் சென்று நான்குமைல் பரப்புக்குள் ஒவ்வொரு தொண்டராகப் பிரேதங்களைத் தூக்கி எறிவது போல் காரிலிருந்து தூக்கி எறிந்து திரும்பினர்.

தகவலறிந்த நம் தோழர்கள் விரைந்து காரில் சென்று அனைவரையும் எடுத்துவர, டாக்டர் பசுபதியால் பரிசோதிக்கப்பெற்றுத் தோழர்களான சிதம்பரம், துரைராசு, சீனுவாசன் மூவரையும் சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப, முதலிருவரை மட்டும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். சீனுவாசன் அவுட் பேஷண்டாக இருந்து மருந்து போட்டுக்கொண்டு வருகிறார்.

மணியம்மையார் கைது.

போலீஸ் லாரி தொண்டர்களோடு சென்றபின் 15000 மக்கள் கூட்டத்தைத் தோழியர் புஷ்பவேணியம்மையார் ஊர்வலமாக நடத்திச் செல்ல, தோழியர் கே. ஏ. மணியம்மை அவர்களும் உடன் சென்றார். இந்தப்பெருங் கூட்டத்தை ரிசர்வ் படையுடன் தடியால் அடித்துப் போலீசார் கலைத்தனர். இதனால் கர்ப்பவதியான தோழியர் புஷ்பவேணி அம்மையாருக்குத் தலையில் சிறு காயம். தோழியர்களான மணி அம்மையார் புஷ்பவேணி அம்மையார் ஆகிய இருவரையும் பின்பு போலீசார் கைது செய்தனர்.

புஷ்பவேணி அம்மையாரை மாலையில் விடுதலை செய்த போலீசார், தோழியர் மணி அம்மையாரைப் பாபநாசம் சப்-ஜெயிலில் வைத்திருக்கின்றனர்.

பெரியார் விடுதலை.

தஞ்சை டிச. 20.

இன்று அதிகாலையில் கும்பகோணத்திலிருந்து தஞ்சை வழியாகத் திருச்சிக்குப் பெரியாரவர்களைக் கொண்டு வந்த போலீசார், திருச்சி சிறையில் அநுமதிக்கமாட்டோம் என்ற பதிலைக் கேட்டு மீண்டும் தஞ்சை சப்-ஜெயிலுக்குக் கொண்டு வந்தனர்.

இங்கிருந்து மாலை 6 மணிக்கு பெரியாரவர்களை வெளியில் அழைத்து வந்தபோது பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கட் கூட்டம் நின்று ஆரவாரிக்கப், போலீசார் அய்யம்பேட்டையில் போய் சென்னைக்கு ரயிலேற்றி வைத்தார்கள். தகவல் தெரிந்த சில தோழர்கள் அய்யம்பேட்டை வரை கார் வைத்துக்கொண்டு தாங்களும் பின் தொடர்ந்து சென்று வழியனுப்பி வைத்தனர்.

மூன்றாம் நாள்.

குடந்தை டிச. 21-

இன்று சட்டமறுப்புச் செய்து ஊர்வலம் வந்த தோழர்கள்:—

1. ஏ. எஸ். வாசன்
2. ஆர். கிருஷ்ணமூர்த்தி
3. கே. இராமசாமி
4. சி. ஆரோக்கியசாமி
5. சி. செதப்தீன்
6. எஸ். பரமானந்தம்
7. சாமிநாதன்
8. ஜேசுதாசன்
9. என். எஸ். மணி
10. என். கிருஷ்ணன்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# கிறிஸ்துமஸ் பண்டிகை!

★

இவ்வாண்டின் கிறிஸ்துமஸ் பண்டிகையானது, இன்று (டிசம்பர் மாதம் 25-ம் நாள்) நாடெங்குமுள்ள கிறிஸ்துவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துவ மதஸ்தாபகரான இயேசுவின் பிறந்தநாளைக் கொண்டாடி மகிழவேண்டுமென்பதே இதன் நோக்கம். அதன்படி கிறிஸ்துவர்கள், கிறிஸ்துமஸ் பண்டிகையன்று அதிகாலையிலேயே புத்துடைகள் அணிந்து தேவாலயங்களில் கூடி, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து அன்று காலையிலேதான் அற்புதமாகப் பிறந்து விட்டதாகப் பாவனை செய்து, ஞானக் கீதங்களாலும், ஸ்துதி தோத்திரங்களாலும், சுவிசேஷ வாக்கியங்களாலும் அவர் நாமத்தைத் துதித்து கீர்த்தனம் பண்ணுவார்கள். அதற்குள் பொழுது புலர்ந்துவிடும். எனவே தேவாராதனைக்குச் சென்ற மக்கள் "கர்த்தருடைய ஆசீர்வாதத்தை" (ஆளுக்கு ஒரு ரூபாய்க்குமேற்பட்ட காணிக்கை செலுத்திவிட்டு)ப் பெற்றுக்கொண்டு வெளியில் வருவர். வந்ததும் ஒருவருக் கொருவர் கை குலுக்கி அல்லது கும்பிட்டு, தங்களின் கிறிஸ்துமஸ் வாழ்த்தை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்வர். இதற்கு முந்தின நாளே, அவர்களுடைய தூரத்திலிருக்கும் நண்பர்களுக்கும் உற்றார் உறவினருக்கும் கிறிஸ்துமஸ் கார்டுகள் பல (அதிகமான விலையில் வாங்கி) அனுப்பிவிடுவர். பின்னர் தங்கள் தங்கள் (பல வர்ணக் காகிதங்கள் ஒட்டப்பட்ட நட்சத்திர வடிவக் கூண்டுகளால்) அலங்கரிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று 'கேக்'குகள் ரொட்டிகள் பலகாரங்கள் சாப்பிட்டுவிட்டு ஆடிப்பாடி மகிழ்வர். இதுதான் கிறிஸ்துமஸ் பண்டிகையின் கொண்டாட்டம்.

இவ்வாறாக ஏராளமான பொருள் விரயத்தோடு கிறிஸ்துவர்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் கிறிஸ்துமஸ் பண்டிகையை இவ்வளவு ஆடம்பரத்தோடு கொண்டாடவேண்டிய அவசியம் ஏதாவது உண்டா, அதன் மத சம்பந்தமான கதைதானென்ன—என்பதை, திராவிடர் கழகத்தாராகிய நாம், அதுவும் ஒரு கிறிஸ்துவனாகிய என் மூலம் அறிந்துகொள்வது மிக மிக அவசியம். அது பற்றியே நானும் அப்பண்டிகை சம்பந்தமான கதையினை ஆராய்ச்சிக் கண்களுடன் கண்டு, அதன் உண்மை நிலையினை உங்களுக்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

கிறிஸ்து பிறந்ததாகக் கூறப்படும் காலத்திலே, பாலஸ்தீனம் முழுவதற்கும் அகுஸ்துராயன் என்பான் சக்கரவர்த்தியாக அரசோச்சி வந்தானாம். அவன் ஆட்சிக்குட்பட்ட தேசங்களில் சீரியா தேசமும் ஒன்றாம். அதில் சிரேனியு என்பான் தேசாதிபதியாக இருந்துவந்தானாம். அவனது மேற்பார்வையிலுள்ள நாடுகளில் கலிலேயாவும் ஒன்றாம். அந்நாட்டிலுள்ள நாசரேத் எனும் ஊரில்தான் மரியாள் எனும் பெயருள்ள கன்னியொருத்தி இருந்தாளாம். அவளை யோசேப்பு எனும் பெயருள்ள ஒரு வாலிபனுக்கு மணம் முடிக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருந்தார்களாம். அக்காலத்தில் தான் காபிரியேல் எனும் தேவதூதன் கன்னி (யாகிய) மரியாளிடம் (நேரிலேயே) தோன்றி அவளை வாழ்த்திவிட்டு, "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு 'இயேசு' என்று பெயரிடுவாயாக" என்று கூறினானாம். அப்போது மரியாள் "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" என்று கூறித் திகைத்தாளாம். உடனே தேவதூதன் "பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் குழந்தை பரிசுத்தமுள்ளது, தேவனுடைய குமாரன் எனப்படும்,, என்று கூறி மறைந்துவிட்டானாம். உடனே மரியாள் தேவனை மகிமைப்படுத்தினாளாம் — கர்ப்பவதியாகி விட்டாளாம். மரியாள் கர்ப்பவதியாகி யிருப்பதை அறிந்த யோசேப்பு, அவள் நடத்தையில் சந்தேகம் கொண்டு அவளை விவாகத்தினின்றும் தள்ளிவைக்க மனதாயிருந்தானாம். உடனே கர்த்தருடைய தூதன் யோசேப்புக்குச்சொப்பனத்தில் தோன்றி அவளுடைய "பரிசுத்தத் தன்மையை" விளக்கிக் கூறினானாம். யோசேப்பும் அவ்வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு அவள் பிள்ளை பெறுமளவும், அவளை 'அறியாதி'ருந்தானாம். அக்காலத்தில் குடிமதிப்பு (சென்ஸஸ்) எழுதவேண்டுமென்று சக்கரவர்த்தி அகுஸ்துராயன் கட்டளை பிறப்பித்தானாம். உடனே எல்லா மக்களும் தத்தமது சொந்த நாடுகளுக்குச் சென்றார்களாம். யோசேப்பும் ஏரோது எனும் சிற்றரசன் ஆண்டுவந்த யூதேயா எனும் நாட்டைச் சேர்ந்தவனாதலால், அவன் அந்நாட்டு வழக்கப்படி தன் மனைவியாகிய மரியாளையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு பெத்லகேம் எனும் ஊருக்குச் சென்றானாம். அப்போது மரியாளுக்குப் பத்தாம் மாதமாம். பெத்லகேமுக்குக் குடிமதிப்பெழுத வந்த மக்கள் ஏராளமாக இருக்கவே, யோசேப்பிற்கும் மரியாளுக்கும் சத்திரத்தில் இடம் கிடைக்காமல் மாட்டுக் கொட்டகை ஒன்றில் தங்கினார்களாம். அப்போதுதான் மரியாளுக்குப் பிரசவ காலம் ஏற்பட்டதாம். மரியாளுக்குக் குழந்தை பிறந்தவுடனேயே அக்குழந்தையின் தலைக்கு நேராகவே ஒரு விசேஷித்த நட்சத்திரம் தோன்றிப் பிரகாசித்ததாம்! அது கிழக்கிலிருந்த வானசாஸ்திரிகளுக்கு முன்னரே வழிகாட்டிச் சென்றதாம், இயேசு பிறந்திருக்கும் இடம் வரை. வயல்களில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு (மட்டும்) ஒரு தேவதூதன் தேவகுமாரனின் பிறப்பைத் தெரிவித்தானாம். உடனே பரமசேனையின் திரள் ஒன்று அத்தேவதூதனுடனே அந்தரத்தில் தோன்றி, தேவனைத் துதித்தார்களாம். உடனே மேய்ப்பர்கள் பெத்லகேமுக்குச் சென்று மரியாளையும், குழந்தையையும் கண்டு வணங்கினார்களாம். இதுதான் இயேசுவின் பிறப்புக் குறித்துக் கட்டப்பட்டிருக்கும் கதை.

நாம் இக் கதையினை உண்மை என்று வைத்துக்கொண்டால்:—

1. கன்னிப் பெண் ஆடவர் சேர்க்கையின்றியே கர்ப்பம் தரித்தல் கூடும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

2. இயேசு பாலனாக அவதரித்த செய்தி மேய்ப்பர்களுக்கும், விசேஷித்த நட்சத்திரத்தின் மூலம் வானசாஸ்திரிகளுக்குமட்டுமே அறிவிக்கப்பட்டது. மற்றபடி யோசேப்புக்கும் மரியாளுக்கும் தவிர, இச்செய்தி வேறு எவருக்கும் தெரிவிக்கப்படவில்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

முன்னது இயற்கைக்கு மாறாகவும், பின்னது பாரபட்சமாகவும் இருந்தபோதிலும், இயேசுவின் பிறப்பு குறித்து அவருடைய முக்கிய சீடர்களாகிய மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் என்பவர்கள் சுவிசேஷமாக (நற்செய்தியாக) எழுதிவைத்திருக்கும் குறிப்புகளிலும் நிகழ்ச்சிகளிலுங் கூட ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல செய்திகள் காணக்கிடக்கின்றன.

உதாரணமாக, மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் 'மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதி

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# படை புறப்பட்டு விட்டது!

★

படை புறப்பட்டு விட்டது, சுமார் ஆயிரம் பேர்களைக் கொண்டபடை புறப்பட்டு விட்டது! சேலத்திலிருந்து புறப்பட்டு, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையை நோக்கிச் செல்லுகிறது! ஜார்ஜ் கோட்டையை முற்றுகையிட்டு விட்டபிறகு எங்கு, எத்திசையை நோக்கிச் செல்லுமோ நான் அறியேன். ஆனால் ஒன்று மட்டும் உறுதி கூறி விடுகிறேன். அதாவது, பாய்ந்து செல்லும் படையைக் கண்டு கோழை உள்ளம் படைத்தவர்கள் பதுங்குவதற்கு மூலை முடுக்குகளைத் தேடி ஓடவோ, வீர உள்ளம் படைத்தவர்கள் படையை எதிர்கொண்டு தாக்கி புறமுதுகாட்டி ஓடச்செய்ய ஆயத்தமாகவோ வேண்டாம். ஏனெனில் நான் குறிப்பிடும் படை நாகரீக இவ்விருபதாம் நூற்றாண்டிற்கு ஏற்ற வண்ணம் ஆயுத தளவாடங்களோடோ, அல்லது ஆயுதப் பயிற்சி பெற்றவர்களாகவோ, படையில் செல்லவில்லை. ஆனாலும் அது விஷயத்தில் கொஞ்சம் சர்வ ஜாக்கிரதையாகவே இருங்கள். என்னப்பா பயப்படவேண்டாம், எங்கும் ஓடி ஒழியவும் வேண்டாம் என ஆறுதல் கூறிவிட்டு, ஆனால்...என்ற பீடிகையைப் போட்டு திணறச் செய்கிறாயே! என என்னைச் சாடுகிறீர்களல்லவா! சரி ப்டியுங்கள் விஷயம் புலப்படும்.

படைவீரர்கள் சேலத்துப் பார்ப்பனர்கள். என்ன? படைவீரர்கள் பார்ப்பனர்கள் என்றதும் சிரிக்கவா செய்கிறீர்கள். பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து என்று கூறும் தர்ப்பா சூரர்களைப் படை வீரர்கள் என்று சொன்னதற்காகவா இச்சிரிப்பு? அதை அறிந்துதானே முதலிலேயே யாரும் பயப்பட வேண்டாம் என எச்சரிக்கை செய்தேன். என்ன் இருந்தாலும் ஒரு ஆயிரம் பேர்கள் வரையிலும் சேர்ந்து விட்டால் படை என்று சொன்னால் தவறாகாது பாருங்கள். அதனால் தான் அவ்விதம் கூறினேன். வேண்டுமேயானால் நீங்கள் பஞ்சாங்கப்படை என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். உங்களை யார் கேட்கப் போவது?

சுமார் ஆயிரம் கையொப்பம் அடங்கிய மகஜர் ஒன்று தயார் செய்து 5, 6 பார்ப்பனர்களும், ஒன்று இரண்டு (நம் இனத்தவர்) அவர்தம் எடுபிடி ஆட்களும் ஓமந்தூராரிடம் கொண்டு போகிறார்களாம். அதாவது திராவிடர் கழகம் வகுப்புவாதத்தைக் கிளறிவிட்டுப் பார்ப்பனர்கள் மீது பிற மக்களை உசுப்பி விடுகிறதாம். அதனால் பார்ப்பனர்களுக்கு ஆபத்தாகி விட்டதாம்! இந்த ஆபத்திலிருந்து தப்ப, திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமாம். இது அந்த மகஜரின் தாத்பர்யம்.

பூ இவ்வளவுதானா! இதற்காகத் தானா படை புறப்பட்டு விட்டது? ஓமந்தூராரை நோக்கிச் சாடி விட்டது என்றவுடன் என்னமோ, ஏதோ, ஓமந்தூராருக்கு என்ன ஆபத்தோ என்றல்லவா எண்ணி விட்டோம். கேவலம் இந்த மகஜருக்கா ஓமந்தூரார் பயப்படுவார்? விடாக்கண்டன் ராசகோபாலாச்சாரியார் அவர்களையே விரட்டி அடித்த காமராசுவின் பாய்ச்சலுக்குப் பதுங்காத ஓமந்தூராரா! இந்த மகஜருக்கு அஞ்சுபவர்? என நீங்கள் நினைக்கலாம். நீங்கள் நினைக்கிறபடி லகான் இல்லாத குதிரையான காமராசைக் கண்டு ஓமந்தூரார் பயப்படாமல் இருக்கலாம். ஆனால் பார்ப்பனர்கள் விஷயத்தில் அப்படி அல்லவே ஓமந்தூரார். அமெரிக்காதேசத்து அணுக்குண்டைவிட அபாயம் உடையவர்கள் பார்ப்பனர்கள் என்பதாக அல்லவா கருதுகிறார். அப்படி இல்லாது போனால் ஒரு "இந்து" ஒரு "சுதேசமித்திரன்" பத்திரிகைகள் கடைசிப் பக்கத்தில், கடைசி பத்தியில், கடைசி வரியில் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு, ஓமந்தூராரைத் தங்கள் அலுவலகத்தில் வந்து காணும்படி (இது போன்ற கட்டளை) எழுதினால் ஓடோடிப் போவாரா! ஓமந்தூரார். இவ்விதம் பார்ப்பனர்களைக் கண்டு நடுங்கையில் 1000 கையொப்பம் கொண்ட மகஜர் என்றால் ஓமந்தூரார் க்வனிக்காமலோ, கவலைப்படாமலோ எப்படி இருக்க முடியும்? எனவே பார்ப்பனர்கள் சொல்லியபடி ஓமந்தூரார் திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்டாவிட்டாலும் (முடியாவிட்டாலும்) அந்த அளவுக்குப் பார்ப்பனர்கள் மனங்குளிர்ச்சி அடையும் வண்ணம் ஏதாவது ஒன்றைச் செய்தே தீருவார்.

ஆனால் அதைப்பற்றி நாம் கவலைப்படத்தேவையில்லை. ஓமந்தூரார் எந்த அடக்குமுறையைத் திராவிடர் கழகத்தின் மீது வீசினாலும் திராவிடக்கழகக் கொள்கை அழிந்துவிடாது. அதற்குப்பதில் வளர்ச்சியையே தரும். ஏட்டைப் புரட்டிப் பாருங்களேன், உண்மையா? பொய்யா என்று.

கருப்புச்சட்டைப்படையைச் சட்ட விரோதமாக்கினார். ஓமந்தூரார் என்ன கண்டார்? எங்கும் கருப்புமயத்தைக்கண்டார். 'விடுதலை'க்கு 2000 ஜாமீன் கேட்டார். அதன்படியே 2000த்தையும் பெற்றுக்கொண்டு பொது மக்களிடம் 15000 ரூபாய் வாங்கித்தந்தார். ஒரு "போர்வாள்" நாடகத்திற்குத் தடை விதித்தார். அதற்குப் பல "போர்வாள்"களை உற்பத்தி செய்தார். இராவண காவியத்தை, விற்கலாகாது எனத் தடை விதித்தார். சில கடைகளில் வாங்குவாரற்றுத் தேங்கிக் கிடந்த இராவண காவியத்தை, ஒன்று கூட விலைக்கு அகப்படாதவாறு, விற்பனை செய்து நாட்டிலே பரப்பினார். இதுபோலத்தான் மற்றவைகளும். எனவே தான் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று கூறினேன்.

ஆனால்! கனம் ஓமந்தூரார் அவர்களுக்கு நான் கூறுவது ஒன்றே ஒன்றுதான். திராவிடர் கழகம், உலகமே ஒப்புக்கொள்ளக்கூடிய, ஆண், பெண் ஆகிய இரு சாதிகளைத் தவிர வேறு சாதிகள் கூடாது என்றுதான் கூறி வருகிறது என்பதை உங்களோடு நாட்டோரும் நன்கு அறிவர். ஆனால் திடீரென, பார்ப்பனர்கள் இப்போது திராவிடர் கழகத்தின் மீது மோதுவதின் காரணம், அரசாங்க அலுவல்களில் இருக்கும் பார்ப்பனர்களின் எண்ணிக்கையை எடுத்து, இதை மக்களிடம் காட்டி, பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையை "விடுதலை" எடுத்துக் காட்டுவதால் தான் என்கின்றனர். இப்பணியை, "விடுதலை" ஆதி முதல் செய்து வருகிறதே ஒழிய, ஓமந்தூரார் ஆட்சியில் மட்டுமல்ல. இதை ஓமந்தூரார், உணர்ந்து தெளிந்துகொள்ள ஒரு ஆதாரத்தைத் தருகிறேன். இதைப் பார்ப்பனர்களிடம் காட்டி, பார்ப்பனோத்தமர்களே! "நான் ஆட்சியில் இருப்பதால்தான் "விடுதலை" புள்ளி விபரங்களை வெளியிடும் பணியில் தைரியமாக இறங்கி இருக்கிறது என்று எண்ணாதீர்கள். அது அதன் பரம்பரைக் கொள்கை. வேண்டுமானால் இதோ பாருங்கள் 8-ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட விபரத்தை. அதாவது, 3—4—40-புதன்கிழமை மலர் 5. இதழ் 184. முதல் பக்கத்தில் இப்படி வெளியிட்டிருக்கிறது.

### சென்னை, ஹைக்கோர்ட் உத்தியோகங்கள்.

### பிரதம நீதிபதி கவனிப்பாரா?

சென்னை ஹைக்கோர்ட்டில் கீழ்க் கண்ட உத்தியோகங்களெல்லாம் பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. ரிஜிஸ்டிரார்—டி. சுப்பராவ்.
2. மாஸ்டர்—ஆர். சத்தியமூர்த்தி.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

குடி அரசு

25—12—48 சனிக்கிழமை.

# மனக்கோட்டை மணற்கோட்டைதான்!

—o—

"எல்லோரும் குடிக்கக்கூடாது, ஆனால் எனக்கு மட்டும் அது இல்லை" என்கிற போக்கையுடைய சூரப்புலி சுப்பராயன் அவர்களின் போலீஸ் நிர்வாகத்தையும் தோற்கடித்து விட்டது நமது ஓமந்தூராரின் போலீஸ்நிர்வாகம். ஏன்? நமது ஓமந்தூரார் போலீஸ் நிர்வாகத்தை யேற்ற பிறகுதான் சென்னையில் அறப்போர் நடத்திய, 7-மாதக் கர்ப்பிணியான தோழியர் தனலட்சுமியாரின் பச்சிளங் கருவைச் சிதைக்கும் பாதமான அடக்குமுறையை நடத்திக்காட்டி யிருக்கிறார். அவரின் போலீஸ் நிர்வாகம் தான், இப்போது குடந்தையில், அடங்காத ரத்த வெறி கொண்டலையும் மிருக உணர்ச்சியின் சிகரத்தை எட்டிப்பிடித்திருக்கிறது. கும்பகோணத்தில் 2-ம்நாள் 5ம் நாள் நடந்த உரிமைப் போராட்டத்தின்போது, போலீஸ் அதிகாரவர்க்கம் நடந்துகொண்டிருக்கும் போக்கிரித் தனமான, சித்திரவதை செய்த போக்கைக்கண்ட எவரும், இதைக்காட்டிலும் ஒரு கொலை வெறியன், குடிவெறியன் ஆட்சி எவ்வளவோ நல்லா யிருக்குமே என்று எண்ணாமலிருக்க முடியாது. அவ்வளவு கொடுமையாக அங்கு அதிகார வர்க்கம் நடந்துகொண்டு வருகிறது. ஒரு வேளை கொலை வெறி, குடி வெறி ஆகியவெறிகளைக் காட்டிலும், அடிமை மோகவெறி-பக்தி வெறி என்பது அவ்வெல்லாவற்றையும் மிஞ்சி நிற்கும் போலும்.

14-ம் நாள் கூடிய மத்தியக்கமிட்டியின் முடிவுப்படி 19-ம் நாள் முதல் உரிமைப்போர் துவங்கப் படும் என ஊராள்வோருக்கு அறிவிக்கப்பட்டது. இடையே 112-மணி நேரம் கொடுக்கப்பட்டிருந்தும் கூட அந்த இடைக்காலத்தை தந்திரத்துக்கும், சூழ்ச்சிக்கும், தறுதலைப் போக்குக்குமாகச் செலவு செய்திருக்கிறார்களே ஒழிய உண்மைக்கும், நேர்மைக்கும் பயன்படுத்தவில்லை அதிகார வர்க்கம் என இப்போது உணருகின்றோம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அன்றே (14-ந்தேதியே) உரிமைப் போரைத் தொடங்காமல், இளைஞர்களின் எழுச்சி வேகத்தையெல்லாம் அடக்கிப் பெரியாரவர்கள் 4-நாளைக்கு மேல் கெடு கொடுத்தார்கள் என்றால்: அது அதிகார வர்க்கம் சிந்தித்துச் செயல் புரியட்டும் என்பதற்காகத்தான். ஆனால் நடந்ததென்ன?

18-ம் தேதி நடுச் சாமத்திலேயே பெரும் கொள்ளைக்காரக் குறும்பர்களைப் பிடிப்பது போல பெரும் ராணுவ முஸ்தீப்புகளோடு சென்று, தந்தை பெரியாரவர்களையும் தோழர்களான கே. கே. நீலமேகம், பி. ஆர். பொன்னுசாமி எஸ். கே. சாமி வழக்கறிஞர் முத்து தனபால் ஆகிய அய்வரையும் 151-வது செக்‌ஷன்படி கைது செய்திருக்கிறார்கள்.

இப்படிக் கைது செய்து விட்டால், உரிமைப் போராட்டம் ஒழிந்துவிடும் என்று அதிகார வர்க்கம் நம்பியிருக்கிறதே, அதைக் கண்டுதான், அதனுடைய மூடத்தனத்திற்கு முடிவேயில்லையா என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். "நல்லமாட்டுக்கு ஒரு சூடு" என்பது நாடாள்வோர் விஷயத்தில் பொருந்தாது என்பதைத்தான் நாம் பார்த்து வருகின்றோம். இல்லாவிட்டால், ஆச்சாரியார் பவனியின்போது பெரியாரவர்களை சிறைப்படுத்தி விட்டால் ஆனந்தமாகச் சண்டப் பிரசண்டம் செய்யவைக்கலாம் என்று கனவு கண்ட அதிகார வர்க்கம், அதற்கு மாறாக விபரீதமான பலனை கைமேல் கண்டுவிட்ட பிறகும் அதாவது பெரியாரைச் சிறைப்படுத்தியதால் தான் கவர்னர் ஜெனரல் காரில் கல்லெறியும்படியான அளவுக்கு உணர்ச்சி வேகம் ஓங்கி நின்றது என்பதை உணர்ந்த பிறகும் 2-வது தடவையாக அதே வேலையைச் செய்யத் துணிந்தார்கள் என்றால் இது கோணல் புத்தியே தவிர வேறென்ன?

இப்படிக் கைது செய்யப்பட்டவர்களுக்குள், தந்தை பெரியார் அவர்கள் உடல் நலிவோடு போராடிக்கொண்டிருப்பதைப் பார்த்தும், ஒரு ஓட்டை "வானில்" குதிரைச் சவாரி செய்யவைத்து திருச்சிக்குக் கொண்டு வந்து, பின் தஞ்சைக்குத் திருப்பி, அங்கிருந்து அய்யம்பேட்டைக்குக் கூட்டிச் சென்று விடுதலை செய்திருக்கின்றனர். இந்த விடுதலையைப் பார்க்கும்போது இதற்கு என்ன அர்த்தம் என்றே புரியவில்லை. வேறு சில பத்திரிகைகளில் இதற்குக் காரணம் வேறு கூறப்பட்டிருக்கிறது. "தடை யுத்தரவை மீறினால் தான் தண்டனை. பெரியார் தடையை மீறவில்லை. ஆதலால் பெரியாரை விடுதலை செய்தனர்" என்பதாக ஒரு சில பத்திரிகைகளில் காணப்படுவது உண்மையென்றால், அதே நிலையில் கைதாக்கப்பட்டு உள்ளூர் சப்-ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கும் உள்ளூர்த் தலைவர்களை விடுதலை செய்யாததற்குக் காரணமென்ன? தோழர் நீலமேகம் அவர்கள் மறுநாள் சட்ட மறுப்புச் செய்யப்போகிறார் என்பதைச் சொன்னதினால் அவரைக் கைது செய்தோம் என்று கூறினாலும், மற்ற மூவர்களைக் கைதாக்கியதற்கும், அவர்களையும் பெரியாரோடு சேர்த்து விடுதலை செய்யாமைக்கும் என்ன சமாதானம் சொல்ல முடியும்? பெரியார் அவர்களின் விடுதலைக்கு இது தான் உண்மையான காரணமென்றால், இந்தக் காரணம் தோழர் நீலமேகம் தவிர்த்த மற்ற தலைவர்கள் விஷயத்தில் மட்டும் ஏன் பொருந்தாது? தடையை மீறாததால் விடுதலை செய்யப்பட்டது என்றால், தடையை மீறாதபோது அரஸ்ட் செய்தது முட்டாள்தனம் என்பதை இந்த விடுதலையினால் ஒப்புக்கொள்கிறார்களா? என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம், பெரியாரவர்களின் விடுதலையும் அதற்குக் கூறப்படும் காரணமும் இடமாக இருக்கிறது.

முத்தையா

என்பதை அதிகார வர்க்கம் அறியாமலிருக்க முடியாது. எப்படியோ அவசரப்பட்டு, புத்தி பிசகி, அதிகாரத் திமிர் ஒன்றே காரணமாக நிற்க, நாங்கள் இந்த நடவடிக்கையில் இறங்கி விட்டோம் என்று அதிகாரிகள் ஒப்புக்கொண்டாலும்கூட, உடல் நலிவைக் கண்டு அஞ்சிய அச்சமோ, உரிமைப் போர் நெறிதாண்டி விடும் என்கிற உதறலோதான் இதற்குக் காரணம் என்றால் நாம் அதை மறுக்கவில்லை. ஆனால் பெரியாரவர்களின் உடல் நலிவைப் பெருக்கி, இப்போது வெளியில் விட்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

தலைவர்கள் கைதாக்கப்பட்ட பிறகு, முன்பு தீர்மானித்து அறிவித்திருந்தபடியே சட்டமறுப்புப் போர் சென்ற ஞாயிறு முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாளொன்றுக்குப் பத்துப் பேர் வீதம் உரிமைப் போரில் பங்கு கொண்டு வருகின்றார்கள். தாய்மார்களும் இவ்வுரிமைப் போரில் பங்கு கொள்கிறார்கள். இவர்கள் ஒரு சுயராஜ்ஜிய சர்க்காரில் எப்படி நடத்தப்பட வேண்டும்?

முதல் நாள் போரில் கலந்து கொண்ட தோழர்களையெல்லாம் ஸ்டேசனுக்கு அழைத்துச் சென்று பின் தற்காலீக விடுதலை செய்திருக்கின்றனர். 2ம் நாள் போரில் ஈடுபட்ட தோழர்களையெல்லாம் தடிகொண்டு தாக்கிப் படுகாயமுண்டுபண்ணியிருக்கிறார்கள். எந்த மிருகவுணர்ச்சியோ மேலோங்கி நின்று, அல்ல, அல்ல கழுதைகளையும் தோற்கடிப்பது போல் சில அதிகாரிகள் பூட்ஸ் காலால் கண்ணை மூடிக்கொண்டு உதைத்திருக்கிறார்கள். இதனால் 2 தொண்டர்களுக்கு உயிர் நிலையில் காயம் ஏற்பட்டிருக்கிறது. சிலருக்கு விலா எலும்பு முறிந்தது, மண்டை பிளந்தது, கழுத்தில் படுகாயம். பெண் தொண்டர்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் மீதும் தடியடி வீச்சு! பின் 4 மைல்களுக்கு அப்பால் கொண்டுபோய், பிணங்களைத் தூக்கி எறிவது போல் எறிந்து கொண்டே சென்றிருக்கிறார்கள்! மூன்றாம் நாள் போரில் முன்பு சென்னையில் செய்ததைப் போல 16 மைல்களுக்கப்பால் கொண்டு போய்த் தனித்தனியே இறக்கி விட்டு விட்டார்கள். பொது மக்கள்மீது தடியடி தர்பார்! நாலாம் நாள் போரில் தடியடி 5ம் நாள் போரில் முதலில் பொது மக்களையெல்லாம் தடியாலடித்துத் தூரத்தள்ளி, வீட்டுக்காரர்களையெல்லாம் கதவுசாத்தச் செய்து, தொண்டர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே மூர்ச்சையடையும் வரை தடியடி கொடுத்துப், பின் அதிலும் திருப்திப்படாமல் மூர்ச்சையடைந்தவர்களையும் தூக்கிநிறுத்திக்கொண்டு அடித்திருக்கிறார்கள். அந்தப் படுகாயங்களோடு பல மைல்கள் தாண்டிச் சென்று விட்டு வந்திருக்கிறார்கள். ஆறாம் நாள் போரில் ......இதைத்தான் மிருகவுணர்ச்சியின் உச்ச நிலை என்று முன்பு குறிப்பிட்டோம்.

உரிமைப்போர் என்றால் உயிர்ப்பலி வேண்டும் என்கிறார் ஓமந்தூரார். ராமராஜ்ய சர்க்கார் ரத்த வெறி கொண்டலைகிறது. பச்சை ரத்தம் பரிமாறத் தயார்! ஆனால் சித்திரவதை செய்யும் திருப்பணியில் ஏன் ஈடுபடவேண்டும் என்றுதான் நாம் கேட்கிறோம். மனித சஞ்சாரமில்லாத வனாந்தரங்களுக்குக் கொண்டு செல்லட்டும்! படீர் படீரென்று சுட்டுப் பொசுக்கட்டும்! ஆளவந்தார்களின் அடிமை மோகம் என்கிற வேள்விக்கு அவர்கள் ஆசை தீரு மட்டும் நம் அடலேறுகளின் ஆவிகளை—நம்மை ஆகுதியாகக் கொள்ளட்டும்! கவலையில்லை. ஆனால் அடித்து அடித்துக் காயப்படுத்தி மெல்ல, மெல்ல ஏன் உயிரைக் குடிக்க வேண்டும், மிருகமும்கூட இதைக் கண்டு பின்னடையுமே என்றுதான் கேட்கிறோம்?

எந்த முறையில் நின்றுபார்த்தாலும் அதிகார வர்க்கத்தின் இந்தப் போக்கில் நாம் ஆண்மையைக் காணவில்லை. நபுஞ்சகத் தன்மைதான் அதாவது பேடித்தன்மைதான் உச்சநிலையை அடைந்திருக்கிறது. உதைத்து உதைத்துத்தான் உரிமைப்போரை ஒழிக்க வேண்டும் என்று முடிவுகட்டியிருந்தால், அதுதான் நியாயம் என்று அரசாங்கம் எண்ணியிருந்தால் அந்தக் காட்சியைப் படம் பிடிப்பதை ஏன் பறிமுதல் செய்ய வேண்டும்? தான் செய்வதை நேர்மை என்று கருதினால் சர்க்காரே யல்லவா இதைப் படம் எடுக்கவேண்டும்? ஊருக்கு ஊர் காட்டி இந்த உதவாக்கரை இயக்கத்தில் பங்கு கொள்ளாதீர்கள்! உதைபட்டுச்சாவீர்கள்!! உஷார்!!! என்றல்லவா எச்சரிக்கவேண்டும்? அப்படி அரசாங்கம் செய்யாத ஒன்றை மற்றவர் ஒருவர் செய்கிறார் என்றால் அதை ஏன் பிடுங்கிக் கொள்ளவேண்டும்? ஆரிய ராமனின் பேடித் தத்துவமே தவிர இதில் வேறு என்ன நியாயம் ஒளிந்துகொண்டிருக்கிறது என்று கேட்கிறோம்?

பார்ப்பன அடிமையான இந்த அரசாங்கத்தின் பேடிச் செயலுக்குப் பார்ப்பனீயம் திரைபோட்டு மறைக்கும் பசப்புவேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருக்கிறது. பரம்பரை பழக்கம்! திரையை மறைத்து, மறைத்து அசுற்குத் திவ்யத்தைக் கற்பித்துப்பின் திரையைத் தூக்கித் தூக்கிக் காசு பறிக்கும் புத்தி பார்ப்பனீயத்துக்குக் கோவில் அளவில்நிற்கவில்லை. அரசியலிலும் அந்த வேலை சர்வ சாதாரணமாக நடந்துகொண்டுதான் வருகிறது. அதற்கொரு எடுத்துக்காட்டுதான் கும்பகோணத்துப் பார்ப்பனீயம் செய்யும் கும்ப கோணவேலை.

தலைவர்களைச் சிறையில் வைத்துத், தொண்டர்களை ஆண் என்றும் பெண்ணென்றும் பாராமல் தடியாலும் பூட்ஸாலும் உதைத்துத் தள்ளி, "நாடோடி இனம்தான் நாட்டை ஆளுகிறது" என்பதை எடுத்துக் காட்டுவது போலத் தொண்டர்களை அனாதையாகக் காடுகளில் கொண்டு போய் தவிக்கவிட்டும், அவர்கள் ஆஸ்பத்திரிகளில் கிடந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டும் இருக்கிற நேரத்தில், "தொண்டர்கள் மன்னிப்புக்கேட்டுக்கொண்டனர்" என்று கயிறு திரிக்கிறது பார்ப்பனீயம்.

இல்லம் தீப்பற்றி எறியும்போது பிடில் மீட்டி இன்பம் காண்பது தான் இந்நாட்டுப் பார்ப்பனீயத்தின் பரம்பரைக் குணம். அதை விளக்கிக் காட்டுவதுதான், அண்மையில் காந்தியார் கொல்லப்பட்டபோது, இன்பவாரிதியில் மூழ்கியவர்களாய்ப் பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கிக் கொண்டாடிய காட்சி, இதை இன்றும்

திராவிடருக் குணர்த்துவதுதான் இந்தத் திரை மறைப்பு வேலை. சுட்டுப் பொசுக்குகின்ற கொடும்பாலையில், தூர வழி நடந்து வருகின்ற பிரயாணியை, எட்டத்தில் ஒரு மரவுச்சியில் மறைவாக இருந்து கொண்டு, எறிந்த எறியீட்டி—அம்பு முதலியவற்றால் அவன் தாக்குண்டு, துடிதுடித்துக் கதறி, தண்ணீர் தண்ணீர் என்று பரிதவித்து, மேனி கொப்புளிக்கும் செந்நீர்த்துளியை மிகுந்த ஆவலுடன் பருகித், தடுமாறித் தத்தளித்துச் சாகும் நிலையைக் கண்டு 'ததிங்கிணத்தோம்' போட்டு ஆடுவார்களாம் காட்டுமிராண்டிகள். காட்டுமிராண்டிகளின் இந்தச் செயலுக்கும் கடைகெட்ட கபோதித்தன்மை வாய்ந்த பார்ப்பனீயத்தின் இந்த உலுத்த போக்குக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா? காட்டுமிராண்டிகள் காலப் போக்கில் அழிந்து ஒழிந்தார்கள். இன்று அவர்களைப் பற்றி ஏட்டில்தான் காணுகிறோம்: ஆனால் இந்தக்காட்டுமிராண்டிகள் இன்று வாழ்வதைப் பார்க்கின்றோம். வளமாக உண்டு, பிறரை எத்தி எத்தி ஏமாற்றி உண்டு கொழுப்பதைப் பார்க்கின்றோம். இவர்களுடைய கொழுப்பு எப்போது அடங்கும்? இந்தக் காட்டுமிராண்டி இனம், ஏட்டில்கூடக் காணமுடியாதபடி எப்பொழுது அழிந்தொழியும்? என்ற உத்தமர்களின் கேள்விக்கு—பார்ப்பனீயப் படுமோசத்தால் வாழ்வில் மனமொடிந்து செத்த ஆயிரமாயிரம் அண்ணல்களின் ஏக்கத்திற்கு—விரைவில் விடை கிடைக்கும் என்றே பார்ப்பனீயம் காட்டிக் கொண்டு வருகிறது. "யானை தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக்கொள்வது போல்" பார்ப்பனீயமும்பாழ்குழியை நோக்கிப் பதைபதைப்போடு புறப்பட்டு விட்டது. கண்ணால் காணுகிற இவ்வுண்மையைத் தவிர நாம் வேறு என்ன சொல்ல முடியும்? ஆனால் இந்தப் பார்ப்பனீயம் பூண்டோடு ஒழிந்து போகாதவரை, இந்நாட்டவனுக்கு வாழ்வேயில்லை என்பதை மட்டும் நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

போடப்பட்டிருக்கும் தடை திராவிடக்கழகத்துக்குமட்டுமல்ல, காங்கரஸ்காரர்களுக்கும் தடைதான். தடையை எதிர்த்துச்சட்டமறுப்பிலீடுபட்டிருக்கிறது கழகம். இந்தச் சட்ட மறுப்பில் எப்படிச் சல்லித்தனம் செய்யலாம் என்று யோசிக்கிறார்களாம் நமது கும்பகோணம் காங்கரஸ்காரர்கள். இது உண்மையாயிருக்குமானால் இந்த இழி நடத்தைக்கு எதை உதாரணம் சொல்வதென்றே நமக்குத் தெரியவில்லை. இதைப் பார்க்கும் போது "நான் அடிக்கிறாப்போல அடிக்கிறேன் நீ அழுகிறாப்போல அழு" என்கிற புருஷன் பெண்டாட்டி ஒப்பந்தத்தைப் போல அதிகாரிகள்— காங்கரஸ்காரர்கள் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தத்தின் பேரில்தான் இந் நடவடிக்கைகள் என்றால் தவறென்ன? சிறிதாவது மான, ரோஷம் என்பது இருக்குமானால் இந்த வீரர்கள் மற்றொரு புறத்தில் அல்லவா சட்டமறுப்பிலிறங்கியிருக்கவேண்டும்? ஊரைக் கொள்ளையடிக்கவே எங்களுக்கு நேரம் போதவில்லை, சட்டமறுப்புக்கு நேரம் எங்கேயிருக்கிறது என்று கேட்பதுதான் அவர்களின் நிலை என்றால் இந்த உலுத்த வேலை செய்ய மட்டும் ஏன் ஆசைப்படுகிறார்கள்? "இரும்படிக்கிற இடத்திலே ஈய்க்கும் நாய்க்கும்வேலையில்லையே" என்பதுதான் நம் அறிவுரை.

நாட்டு மக்களுக்கே நாசத்தைச் செய்து—அதை தேசீயம் என்றுமுலாம் பூசிய—நாசவேலைக்காரர்கள் இனியும் நாசவேலையையே செய்யட்டும்! நாடோடி லம்பாடிக் கூட்டமான பார்ப்பனீயம் தன் நச்சு வேலைகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கட்டும்! 'நானிருக்கப்பயமேன்' என்றுநாடாள வந்தவர்க்கு நாள்தோறும் புதுப் புதுவிதத்தில் தைரியம் கூறிக் கொண்டிருக்கட்டும்! "நல்ல சந்தர்ப்பத்தில், நல்ல முறையில் நல்ல பாடத்தைக் கற்பிப்பேன் இந்தி எதிர்ப்பாளர்களுக்கு" என்னும் நேருப்பார்ப்பனரின் நிஷ்டூரமான பேச்சு—நடத்தை நீண்டு வளரட்டும். இவற்றையே சதமென்று எண்ணிக்கொண்டிருக்கட்டும், இவர்கள் ஆட்டுவித்தபடி ஆடும் இந்நாட்டை ஆளவந்த திருக்கூட்டம்! ஆனால் ஒரு திராவிடன் உயிரோடு உள்ளவரை இந்த 'உத்தமர்களின்' மனக்கோட்டை மணற்கோட்டைதான் என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

பைந்தமிழ் காக்கப் பறந்துவந்த இளம் சிங்கங்களே! பாவையர்களே! வெங்கொடுமைச் சாக்காட்டில், விளையாடும் உடலெங்கள் வீரவுடல் என்பதைமெய்ப்பிக்கும் வீரர்களே! வீராங்கனைகளே! சிந்திய ரத்தமும், பெற்ற அவமானமும் சிறிய பால பாடந்தான்! ஆனால் ஆரியத்தின் அழிவுக்கு இதுதான் அச்சாரம்! ஆம்! அழிவுக்கு அச்சாரம் கொடுத்து விட்டீர்கள்! எப்படியும் அந்த அழிவை நாம் விலை கொடுத்தே இனிப் பெற்றாகவேண்டும். இதை மட்டும் உங்கள் நெஞ்சில் நிறுத்துங்கள்! வெற்றி நமதே! ஒழிக அடக்குமுறை அல்ல! ஒழிப்போம் அடக்குமுறையை!

★

## சம்பத் குமாரர் தோற்றம்.

நமது தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் துணைவியாருக்கு 21—12—1948 தேதி இரவு 10-35 மணிக்கு ஆண்மகவு பிறந்திருக்கிறது. தாயும், சேயும் நலம்.

## தோழர்களே!

"குடிஅரசு" அலுவலக சம்பந்தமாகவும், நாதன் கம்பெனி புத்தகசாலை சம்பந்தமாகவும் எழுதப்படும் தபால்களில் நாமே நேரில் பார்க்கவேண்டும் என்கிற முக்கிய தபால்களைத் தயவு செய்து கீழ்க்கண்டபடி விலாசமிட்டு எழுதவேண்டுகிறேன்.

பி. ஷண்முகவேலாயுதன்,
"குடிஅரசு" ஆபீஸ், ஈரோடு.

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 55-ம் நாள் போர்.

சென்னை டிச 16.

தோழர்களான அலர்மேலு அம்மையார், கலைச் செல்வன், சாளைக் கபீர், முனுசாமி, திராவிட மணி ஆகிய 5-அறப்போர் தொண்டர்களும் பெத்து நாய்க்கன் பேட்டை காசி விசுவநாதர் கோயிலிலிருந்து திரளான மக்கட் கூட்டம் பின்பற்றி வர 8-30— மணிக்குப் புறப்பட்டு இந்து தியாலாஜிகல் பள்ளிமுன்பு 10-மணி வரை மறியல் செய்தனர்.

ரோஜா முத்தையா

(7ம் பக்கத் தொடர்ச்சி)

3. டிபுடி ரிஜிஸ்டிரார்—
பி. சி. சங்கரநாராயணா.
4. முதல் உதவி ரிஜிஸ்டிரார்—
ஆர். ஜெயராம அய்யர்.
5. உதவி ரிஜிஸ்டிரார்-(அப்பீல் தரப்பு) எஸ். சீனிவாச அய்யர்.
6. அட்மினிஸ்டிரேட்டர் ஜனரல்-
—எஸ். ரங்கசாமி அய்யங்கார்.
7. பிரதம லா, ரிபோர்ட்டர்—
ஆர். என். அய்யங்கார்.
8. கிரௌன் பிராசிக்யூடர்—
டி. எஸ். வெங்கட்ராமன்.
9. உதவி லா, ரிப்போர்ட்டர்கள்-
ஜி. ராசகோபால்,
என். சீனிவாச அய்யங்கார்.

பார்த்தீர்களா? பார்ப்பனோத்தமர்களே! நீங்களும் அன்றிலிருந்து இன்றுவரையிலும், பதவியைவிட்டபாடில்லை. "விடுதலை"யும் தன் வேலையை விட்டபாடில்லை. இருவருக்கும் பொதுவில் நான் என் செய்வது என மகஜர் கொண்டு வந்தவர்களிடம் கூறுங்கள். தைரியமிருந்தால் பார்ப்பனர்கள் தானே வகுப்புவாதிகள் என்கிற உண்மையை விளக்குங்கள். இல்லை உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்.

"வாலி"

[6ம் பக்கத் தொடர்ச்சி]

யானாள் என்று காணப்பட்டது' என முதலாம் அதிகாரம் 18-ம்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இம் மத்தேயு சுவிசேஷகன் 'மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்' என்று கூறாது, 'கர்ப்பவதி' யானாள் என்று காணப்பட்டது என்று சந்தேகத்துடன் கூறுவானேன்? மேலும் இச்சுவிசேஷகன், கர்த்தருடைய தூதன் யோசேப்பிற்கு சொப்பனங்களில் தோன்றி அறிவித்தவைகளையே விரிவாக எடுத்துக் கூறுகிறான். அதேபோது மற்றொரு சுவிசேஷகனாகிய லூக்கா, கன்னி மரியாளுக்குக் கர்த்தருடைய தூதன் நேரில் தோன்றி அறிவித்தவைகளையே அதிக விபரமாய் எடுத்துக் கூறுகிறான். ஆனால் மற்றுமிரு சுவிசேஷகர்களாகிய யோவானும் மார்க்கும் இயேசுவின் பிறப்பைக் குறித்து ஒரு குறிப்புமே எழுதாமல் விட்டதுடன், யோவான் மற்றொரு ஸ்நானகனா (ஞானஸ்நானம் கொடுத்துப் பெயரிடுபவன்) கிய யோவானின் உபதேசங்களை மட்டும் கூற, மார்க்கு என்பவன் அந்த ஸ்நானகனாகிய யோவானின் வாழ்க்கையினை மட்டும் கூறுகின்றனர். இதனால் 'அறியப்படுவது யாதெனில், இந் நான்கு சுவிசேஷங்களையும் தனித் தனி சுவிசேஷகர்களே எழுதாமல் ஒருவரே பலவிதமாகக் கற்பனை செய்து கதை எழுதியிருக்கிறார் என்பதே. யோவானும் மார்க்கும் மற்றொரு ஸ்நானகனாகிய யோவானுக்கு முக்கியம் கொடுத்த காரணம், அவன்தான் இயேசு உலக இரட்சகனாக பூலோகத்தில் அவதரிக்கப்போகும்—அவதரித்த செய்தியினை உபதேசித்து அவரைப் பிரசித்தம் பண்ணினதுதான். ஒருவர் நல்ல பெயர் எடுக்க, மற்றொருவர் அவர் புகழ் பரப்பத்தானே வேண்டும்! அவருக்கும் அவர் புகழில் பங்குண்டல்லவா? மற்றும் அநேக அய்யப்பாடுகள் இச் சுவிசேஷங்களிலே காணப்படுகின்றன. இயேசு பிறந்தபோது ஒரு விசேஷித்த நட்சத்திரம் தோன்றியதாகவும், அது இயேசுவைத் தரிசிக்க வந்த வானசாஸ்திரிகளுக்கு மட்டும் வழிகாட்டியாக நகர்ந்து, இயேசு பிறந்திருக்கும் இடம் வரை சென்ற நிகழ்ச்சியினை மத்தேயு சுவிசேஷகன் மட்டும் கூறுகிறான். ஒரு நட்சத்திரம் நகர்ந்து வழிகாட்டியதாகச் செல்ல முடியுமா? அப்படிச் சென்றாலும் அது வானசாஸ்திரிகளுடன் மாத்திரம் வழிகாட்டியாகச் செல்வானேன்? இதே சுவிசேஷகன் மட்டும்தான், இயேசு தாவீதின் சிங்காதனத்தில் அமர்ந்து ராஜ்யபாரம் செய்யப் போவதாக எண்ணி, அந்நாட்டை ஆண்டுவந்த ஏரோது அரசன் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடியதாகக் கூறுகிறான். மற்றெந்தச் சுவிசேஷகனும் இதைப்பற்றிக் கூறவில்லை. மற்றொரு சுவிசேஷகனாகிய லூக்கா, மேய்ப்பருக்குக் கர்த்தருடைய தூதன் இயேசுவின் பிறப்பை அறிவித்ததாகக் கூறுகிறான். இந்நிகழ்ச்சியினை வேறெந்தச் சுவிசேஷகனுமே கூறவில்லை. தேவதூதன், இயேசு பிறந்தசெய்தியினை ஆடுமேய்ப்பருக்கு மட்டும் அறிவிப்பானேன்? பரம சேனையின் திரள் தேவனைத் துதித்த காட்சி மற்றெவருக்கும் தெரியாமல் ஆடு மேய்ப்பருக்கு மட்டும் தெரிவானேன்? இச்செய்திகளையும் இயேசுவின் பிறப்பு, அதன்போது நிகழ்ந்த அற்புதங்கள் (அவர் முப்பது வயதில் யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெறும்வரையில், அதாவது முப்பது ஆண்டுகளாக அவர் செய்தவைகள்) முதலியனவற்றை மற்ற இரு சுவிசேஷகர்களாகிய மார்க்கும் யோவானும் கூறாது விடுவானேன்? இவைகளையெல்லாம் உற்று நோக்கும்போது, அக்கால மக்கள் இயேசு என்ற ஒரு சீர்திருத்தக்காரரை வைத்து ஒரு பெரும் கதை எழுதி, அவரை ஒரு கடவுளாக்கி, அவருக்குத் தாங்கள் சீடர்களாகவும் ஆசாரியர் (புரோகிதர்) களாகவும் கூறி, பாமர மக்களை ஏமாற்றிக் காணிக்கைகள் என்று காசுபறித்து வயிறு வளர்த்து வந்திருக்கின்றனர்; அதன் வழி வந்ததுதான் கிறிஸ்துவ மதம் என்பது தெரியாமல் போகாது.

எனவே நம் திராவிட மக்களில் என் போன்று கிறிஸ்துவர்களாகிய அனைவரும், கிறிஸ்து அக்காலத்திய ஒரு சீர்திருத்தவாதி என்பதை ஒப்புக்கொள்ளலாமேயன்றி, அவரைக் கடவுளாக—தேவ குமாரனாக ஒப்புக்கொள்ள முடியாது. இன்னமும் சற்று அழுத்தமாகக் கூறவேண்டுமானால், இயேசுவைவிட எந்த வகையிலும் தாழ்வில்லாத அவரைவிட அன்புடைமையில்—கொல்லாமையில்—பகுத்தறிவின் பண்பில் மேலானவராக நமது திருவள்ளுவர் இருக்கிறார். வேதத்தை (பைபிளை) விட மேலான திருக்குறள் நமக்கிருக்கிறது. எனவே நாம் இயேசுவை ஒரு சீர்திருத்தவாதி என்று ஒப்புக்கொண்டாலும் கூட, அவரை நாம் கடவுளாக—தேவகுமாரனாக ஏற்றுக்கொள்ள வேண்டியதேயில்லை. கிறிஸ்துவ மதத்தையும் நாம் கடைப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு நீதிநெறி காட்டத் திருக்குறள் படிக்கலாம். நமது திராவிட அன்பு மதஸ்தாபகரான திருவள்ளுவர் நினைவுநாள் கொண்டாடலாம். எனவே நமக்கு வேண்டியது கிறிஸ்துமஸ் பண்டிகையல்ல; திருவள்ளுவர் நினைவு நாள்!

"சீலன்"

## ஆட்சியாளரின் மிருகச் செயலுக்கு —கண்டனம்.—

ஈரோட்டில்

டிச 20.

இன்று மாலையில் விடாத மழையாயிருந்தும் கூட தொண்டர்களின் 'மெக்கபோன்' பிரச்சாரத்தோடு துண்டு வெளியீட்டையும் கண்டு பெரும் கூட்டம் கூடியது.

இரவு 6½-மணிக்கு டவுன் ஸ்கூலில் தோழர் சுப்பண்ணா தலைமையில் கூடிய கண்டனக் கூட்டத்தில் தோழர்களான பி. சண்முகவேலாயுதன், புலவர் மாணிக்கம், சுப்பய்யன் அப்பாவு, பாலகுரு, பெருமாள் ஆகியோர் தலைவர்கள் கைதாக்கப்பட்டதைக் கண்டித்தும் அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்தும் பேசினார்கள்.

கூட்டத்திற்கு ஒலிபெருக்கி வைக்கப்பட்டிருந்தது, கூட்டம் 10-மணிக்கு முடிந்தது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

போலீசார் தடியையும் துப்பாக்கியையும் காட்டிப் பயமுறுத்தியும் பயனில்லாது போகவே, தொண்டர்கள் அணிந்திருந்த மாலையைப் பிய்த்தெறிந்து குரங்கு சேட்டை செய்தனர் போலீஸ் அதிகாரிகள். தொண்டர்களுக்கு வெகு தொலைவில் நின்று கொண்டிருந்த பதினாயிரக்கணக்கான பொதுமக்கள்மீது போலீசாரின் தடியடி தர்பார் 15 நிமிஷம் வரை நடந்தது. அக்கூட்டத்தில் கருப்புடையுடன் நின்று கொண்டிருந்த மாயவரம் தோழர் ராமசாமி என்பவரையும் போலீசார் மிரட்டி, தொண்டர்களோடு சேர்த்து லாரியில் ஏற்றி 15 மைல்களுக்கப்பால் 2 பர்லாங்குக்கொருவர் வீதம் இறக்கு விழாச் செய்தனர். இறக்கப்பட்ட தொண்டர்கள் ஆங்காங்குள்ள கிராமங்களுக்குச் சென்று இந்தி எதிர்ப்புப்பிரசாரம் செய்து கொண்டே திரும்பி வருகின்றனர்.

தொண்டர்கள் லாரியில் ஏற்றப்பட்டுச் சென்றபின் பொதுமக்கள் அங்கிருந்து 3 பிரிவாகப் பிரிந்து எதிர்ப்பொலி முழக்கி, அடக்கு முறையைக் கண்டித்து ஊர்வலம் வந்தனர்.

### நான்காம் நாள்.

குடந்தை டிச. 22-

இன்று சட்ட மறுப்புச் செய்த தோழர்கள்:—

1. மொய்தீன்
2. கோவிந்தராசன்
3. உத்திராபதி
4. சிவகுருநாதன்
5. ஆர். நடராசன்
6. தங்கராசு
7. நாராயணசாமி
8. ரங்கநாதன்
9. கதிர்வேலு
10. கோதண்டபாணி.

ஆகிய இவர்களை வழக்கம் போல் போலீசார் அதட்டி, மிரட்டிப் பின் தடியடி வேலையில்இறங்கினர். தடியடியைத் தாங்கிய தொண்டர்கள் மேலும் மேலும் தீவிரமாக எதிர்ப்பொலி முழக்கினர். பின் அவர்களைப் போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றனர்.

பொது மக்கள்மீது நடத்திய தடியடி தர்பார் பயன்தராது போகவே, பொது மக்கள் அமைதியாக ஊர்வலம் சென்று எதிர்ப்பொலி முழக்கிச் சென்றனர்.

இக்காட்சிகளைப் படம் பிடித்த திருவாரூர் தோழர் முத்துக்கிருஷ்ணனின் 'கேமிரா'வைப் பறிமுதல் செய்தபோலீசார், பின்பு 'பிலிமை' மட்டும் எடுத்துக்கொண்டு கேமிராவைத் திருப்பிக்கொடுத்து விட்டனர்.

## இந்தி எதிர்ப்பு மறியல்.

### 56-ம் நாள் போர்!

சென்னை டிச 17.

ஆரியத் தலைமை ஆசிரியரின் அபார மூளையால் தொண்டர்களை ஏமாற்றுவதற்காக இன்று ஒரு மணி நேரம் முன்னதாகவே பள்ளி தொடங்கியது. இதை எப்படியோ தெரிந்துகொண்டு, தோழர் மணிமொழியார் முயற்சியால் 5-தொண்டர்களும் காலை 6-45-க்குப் புறப்பட்டு 8-மணி வரை மறியல் செய்தனர்.

வஞ்சகப் பார்ப்பன மூளை மற்றொருவேலையும் செய்திருக்கிறது. மாணவர்களைத் தொண்டர்கள் கெஞ்சிக் கேட்கும்போது, எந்தெந்த மாணவர்கள் தலையாட்டுகிறார்கள், சரி சொல்லுகிறார்கள், பதில் வணக்கம் செய்கிறார்கள் என்பதைக் கவனித்துத் தண்டிப்பதற்காக, மறியல் நேரத்தில் பள்ளி வாசலின் உட்புறத்தில் இருபக்கங்களிலும் வரிசையாக எல்லா வகுப்பாசிரியர்களும் நின்று கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறார் தலைமை ஆசிரியர். அத்தகைய மாணவர்களை நேற்றே கடிந்தும், மிரட்டியும், எச்சரித்துமிருக்கிறாராம்.

### 57-ம் நாள் போர்.

சென்னை டிச 20.

இன்று தோழர்களான ஜி. இராமசாமி, சாளைக்கபீர், அலர்மேலு அம்மையார், முனுசாமி, திராவிடமணி ஆகிய தொண்டர்கள் அய்வரும் இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பு 9-மணி முதல் 10-மணி வரை மறியல் செய்தனர்.

கனத்த மழையாயிருந்தும் கூட கணக்கிலடங்காத கூட்டம்! "வாழ்க சிறைக்கு அஞ்சாப் பெரியார்" என்றும் வாழ்த்தொலி எங்கும் எதிரொலித்தது! போலீசாரின் கெடுபிடியும் இன்று அதிகமாக இருந்தது. தொண்டர்கள் திரும்பும்போது தொடர்ந்து வந்த பொது மக்களிடத்து அவர்களை ஆங்காங்கே நிறுத்தி வைக்கு முறையில் போலீசார் தங்கள் கை வரிசையைக் காட்டினர்.

### 58-ம் நாள் போர்.

சென்னை டிச 21.

இன்றும் வழக்கம் போலவே 5-தொண்டர்களும் 9-மணி முதல் 10-மணி வரை இந்து தியாலாஜிகல் பள்ளி முன்பு மறியல் செய்தனர். மாணவர்கள் தொண்டர்களுக்கு மாலைகள் அணிந்தனர்.

தொண்டர்கள் திரும்பும்போது அவர்களைத் தொடர்ந்து வந்த இளம் மாணவர்களையும் பொது மக்களையும் மிக மூர்க்கத்தனமாகத் தடியால் தள்ளி முரட்டுத்தனமாக நடந்துகொண்டனர் இரு சப்-இன்ஸ்பெக்டர்கள். இவர்கள் போர்க்களத்திற்குப் புதியவர்கள். இதனால் ஒரு முதியவர் மிதித்துத் துவைக்கப்பட்டார்.

### 59-ம்நாள் போர்.

சென்னை டிச 22.

நேற்றுப்போலவே இன்றும் 5-தொண்டர்களும் காசி விசுவநாதர் கோயிலிலிருந்து புறப்பட்டு 10-மணி வரை ஒருமணி நேரம் மறியல் செய்தனர்.

மாணவ, மாணவிகள் சிலர் எதிர்ப்பொலியும் வாழ்த்தொலியும் செய்து நின்ற காட்சி பெரும் இன்பத்தைக் கொடுத்தது.

### நாகை வட்டாரத் தோழர்களுக்கு!

நாகை தாலுக்காவிலுள்ள இயக்கத் தோழர்கள், இந்தி எதிர்ப்பாளர்கள், ஆதரவாளர் சென்ற முறை இ. எ. பொதுமறியலில் கலந்து கொண்டவர்கள் ஆகியோர் மீண்டும் "விடுதலை"யில் அறிக்கை வராத வரையில் கும்பகோணத்துக்குச் செல்லக்கூடாது. புதிதாகத் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள விரும்புபவர்கள் நாகை ஆர். வி. கோபால் திராவிடர்கழகம் என்ற முகவரிக்கு வந்து பதிவு செய்து கொள்ளவும். பதிவு செய்துள்ள தோழர்கள் அறிக்கையை எதிர்நோக்கித் தயாராகுங்கள்.

ஆர். வி. கோபால்,
இ. எ. செயலாளர்,
நாகை தாலுக்கா தலைவர்.

# சிறையிலே சிங்க ஏறுகள்!

★

ஆம்! தன் இனமக்களின் இழிவை ஒழிக்கப் பாடுபடும் அஞ்சா நெஞ்சர்கள், நாட்டின் விடுதலை வேட்கை வீரர்கள், சிங்கஏறுகள், இன்று சிறையிலே வாடுகின்றனர். இல்லை! கம்பீரமாக உலாவுகின்றனர். இனி ஆற்ற வேண்டிய பணியைப் பற்றி சிந்தித்த வண்ணமிருக்கின்றனர். சிறையிலேயும் மக்களைப் பற்றிய சிந்தனையா! என ஏங்குகின்றனர் போலீஸ் அதிகாரிகள். சிறையில் தள்ளப்பட்டும் கொட்டம் அடங்கவில்லையே! வேறு என் செய்வது எனக் கதிகலங்குகின்றனர், அலறித் துடிக்கின்றனர், சிறைக் கூடங்கண்ட செம்மல்களைப் பற்றி, மரணசாசனம் எழுதிச்சென்ற மாவீரர்களைப் பற்றி.

நகராட்சி மன்றத்திலிருந்து மக்களின் வாழ்வுக்குத் திட்டம் தீட்டும் தலைவர், ஈ. வீ. எ. வள்ளிமுத்து, அவருடன் இருந்து பணியாற்றும் இ. மு. சின்னதுரை, சி. க. அ. பால் அரசு, எ. ஆர். கே. குருசாமி, செ. அருணாசலம், மா. ரத்தினசாமி, பொ. தமிழரசன், ஆகிய எமது நண்பர்கள் சிறையிலே இருக்கின்றனர்-இல்லை! தள்ளப்பட்டனர்.

இவ்விதம் சிறைக்குள் தள்ளப்பட்டதின் காரணம் என்ன? கொலை செய்தார்களா? கொள்ளை அடித்தார்களா? கன்னமிட்டார்களா? வழிப்பறிக் களவு செய்தார்களா? இல்லை. அந்த எண்ணமாவது இருந்தது எனத் தெரியவந்ததா? அதுவும் இல்லை. அப்படி இதற்கு முன்பாவது இத்தொழிலை உடையவர்களா? எத்திவாழ்பவர்களா? இல்லையே! இப்பேர்ப்பட்ட எத்தர்களின் கொள்ளைகளை அடியோடு ஒழிக்க வேண்டும், திருத்தவேண்டும் எனக் கருதும் மாசுமறுவற்ற மாணிக்கங்களாயிற்றே! தம் வாழ்க்கைத் தரத்திற்கு மட்டும் பாடுபடும் பரம்பரை வியாபாரிகளாயிற்றே, பின் ஏன்? இத்தண்டனை (விசாரணை) திராவிடக் கழகத்தார் என்பதற்காகவா? அறப்போரின் முன்னணி வீரர்கள் என்பதற்காகவா? இதன் மர்மம் ஒன்றும் விளங்கவில்லையே! அல்லது இத்தோழர்கள் வெளியில் இருந்தால் கோயில்பட்டி தேசியத் தோழர்களின் அண்டசராசரம் அனைத்தும் வெளிக்கிளம்ப, அதன் நிமித்தம் தங்கள் செல்வாக்குக்குறையும், வீதியிலே நடமாட லாயக்கில்லாத மக்கள் வசைமாரி பொழிவார்களே! என்ற எண்ணத்தில், அவர்கள் தூண்டுதலின் பேரில், அவர்கள் ஆசையின் பொருட்டு, கோயில்பட்டியின் உயிர்நாடிகளான எமது தோழர்களின் மீது ஜாமீன் வழக்குத் தொடரப்பட்டதா? ஆம்! அப்படித்தானே! சொல்லுகிறார்கள். இது உண்மையானால்; ஆட்சி முறைக்கு ஒழுங்கா? தர்மமா?

பொது மக்களின் அமைதிக்குவிரோதமாய்* நடந்து கொள்ளுகிறார்கள் என்ற காங்கரஸ் தோழர்களின் புகாரின்பேரில் (ஜாமீன்கட்ட மறுத்ததால்) சிறைக்குள் கிடக்கிறார்களே! இவ்விதமானால் ஒரு கட்சிக்காகவோ தனிப்பட்ட நபர்களுக்காகவோ ஆட்சியா? தனிப்பட்ட நபர்கள் எது சொன்னாலும், தீர விசாரியாமல் உடன் செயலில் காட்டி விடுவதுதானா? தர்மம். தேசியத் தோழர்களின் புகாரின்படி பொதுஜன அமைதிக்கு என்ன பங்கம் விளைவித்தார்கள்? பொது மக்களை வலுச்சண்டைக்கு இழுத்தார்களா? பிறர்மீது உசுப்பிவிட்டார்களா, அதன் நிமித்தம் ஏதாவதொரு வெட்டுப்பழி நடந்ததா? சிறு சச்சரவாவது ஏற்பட்டதா? அப்படியும் இல்லையே! பின் ஏன்? அவர்களுக்கு இந்த நிலை? இவைகளை யெல்லாம் அலசுவதாக இருந்தால் எத்தனையோ உண்மைகள் வெளிக் கிளம்பும். ஆனால் வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் அவைகளை இப்பொழுது நான் அலசுவது முறையாகாது, எனவே நீதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் இதை இத்துடன் விட்டுவிடுகிறேன்.

சரி இதுதான் போகட்டும், தொடரப்பட்ட வழக்காவது உடனடியாகக் கவனிக்கப்படுகிறதா என்றால் அதுவுமில்லை. இவ்விதம் வழக்கு நகர்ந்து கொண்டு போவதைப்பார்த்தால்; காங்கரஸ் வட்டாரங்களில் பேசிக்கொள்வதை, நீதி மன்றம் ஊர்ஜிதப்படுத்தி விட்டதோ! என வேதனைப்படுகிறோம். அதாவது வழக்கை நீடித்துக்கொண்டே போக ஏற்பாடு செய்துவிட்டோம் என்த் தேசிய வட்டாரம் பேசுகிறது. தங்கள் தலைவனை சிறைக்குள் வைத்திருக்கும் நிலையை எண்ணி வருந்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தேசிய வட்டாரத்தின் இச்செய்கை பரபரப்பை உண்டு பண்ணி வருகிறது. ஆனால், தேசிய வட்டாரத்தின் பேச்சுக்கும் நீதி மன்றத்திற்கும் தொடர்பு இருக்காதென்றே நான் நம்புகிறேன். அதுவே முறையுங் கூட. மணிமுடி தரித்த மன்னனானாலும் சரி, மண் சுமக்கும் மனிதனானாலும் சரி, நீதி மன்றம் எவருக்கும் பொது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இதை நீதி மன்றமும் உணர்ந்து கோயில்பட்டி வழக்கு விஷயமாக உடனடியாக ஆவன செய்யவேண்டும்.

கோயில்பட்டியில் மட்டுமல்ல. இப் பீடை தூத்துக்குடியையும் எட்டிப் பிடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு அறிகுறிகளும் தென்படுகின்றன. தூத்துக்குடியிலுள்ள காங்கரஸ் பிரமுகர்கள் இங்குள்ள திராவிடர் கழக முக்கியத் தோழர்களை எப்படியாவது நடவடிக்கை எடுத்துச் சிறைக்குள் தள்ள முயற்சி எடுக்கிறார்களாம்! அதற்கான முயற்சி முகாமும் தயாராகி விட்டதாம். கூலிகளையும் பிடித்தாகி விட்டதாம்; அதற்கான வேலைத்திட்டங்களும் தயாராகிவிட்டதாம், வேலைதான் பாக்கியாம்! இவர்கள் முயற்சி வெற்றிபெறுமானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாங்கள் பயப்படப்போவதுமில்லை, தூக்கு மேடையை எதிர்பார்க்கும் லட்சிய வாதிகளுக்கு இது எந்த மூலை. ஆனால் நான் இங்கு குறிப்பிடவந்தது ஆட்சி எந்த இயக்கத்தைச் சார்ந்ததாக இருந்தாலும் நீதி என்பது எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பதே.

தேசியத் தோழர்களுக்கும் ஒரு வார்த்தை, அதாவது, நாம் ஒருவருக்கொருவர் அரசியலிலே மாறுபட்டிருந்தால் அது இயற்கை. ஆனால் அது விரோதம் ஆகாது. தாங்களும் எங்களை விரோதிகள் என எண்ணவேண்டாம். எண்ணினாலும் எதிரியை நேரில் நின்று வெல்வதே முறை ஒழுங்கு, அதுவே வீரமுங்கூட.

"கே. வி. கே. சாமி"

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது என் கிருஷ்ணர் வீட்டுக்கு வருவதே அரிதாகி விட்டது.

என்ன செய்வது.

உன்நிலையும் அப்படி...?

என் நிலையும் இப்படியா ஆகவேண்டும். யாரைநோவது?

உன்பதிலை எதிர்பார்க்கின்றேன்.

(தோழி)

—ராதை,

## "மணிக் கொடி"

பழனி, டிச. 13-

இந்நகர் சரஸ்வதி அச்சகத்தின் உரிமையாளரான தோழர் பி. எஸ். குருசாமி, அவர்கள் "மணிக்கொடி" என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும், பதிப்பாளராகவும் ஜில்லா கலெக்டரிடம் அனுமதி பெற்றுள்ளார். பத்திரிகை விரைவில் பிரசுரிக்க ஏற்பாடு நடந்து வருகிறது. (நிருபர்)

[8ம் பக்கத் தொடர்ச்சி]

விமலா:- சுவர்க்க லோகத்திலாவது நாம் ஒன்றாக வாழலாம் அல்லவா...?

இராஜன்:- உம்....! சுவர்க்கம்? சுவர்க்கம் என்று ஒன்றிருப்பதாகச் சொல்பவர்கள்யார்? இப்பொழுது இவ்வுலகத்தில், நமக்கு இந்தக் கொடூரமான இன்னல்களை விளைக்கும் சட்டதிட்டங்களை வேதமாக இயற்றிய முழு மூடர்கள் தானே! அவர்களுடைய கொடுமையான கண்மூடிப் பழக்கங்களாலும், வேதாந்தங்களாலும் எத்தனையோ இளம் விதவைகள் இன்றும் நெருப்பின்மேல் புழுக்களாய்த்துடிக்கவில்லையா? கன்னிப் பெண்கள் கிழட்டுக் கணவன்களின் காலடியில் கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருக்க வில்லையா? சாதிக் கொடுமைக்கு ஆளான காதலர்கள் சித்திரவதைப்பட்டுச் சிதைவுறவில்லையா? இந்நாட்டுப் பாட்டாளி மக்களெல்லாம் பாடுபட்டும், பட்டினியாலும், சாதிக்கொடுமையாலும் உயிரும், உடலும் அணு அணுவாய்த் துண்டிக்கப்படும் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்க வில்லையா?.

இவ்வளவு. கொடுமைகளுக்கும் காரணமாக இருக்கும் அந்த ஏட்டில்தானே மறு உலகம் என்றும், சுவர்க்கம் என்றும் எழுதப்பட்டிருக்கிறது? அவைகளை எப்படி நாம் நம்புவது? அப்படியே நம்புவதானாலும், தற்கொலை செய்து கொண்டால் சுவர்க்கம் சித்திக்காதாமே...! உம். இயற்கை மரணத்திற்குப் பிறகு, நமக்கு அவ்வாழ்வு கிடைத்தால் அப்போது வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம்...!

விமலா:- அறிவின் சொரூபமே! உங்கள் பகுத்தறிவுமிக்க ஆராய்ச்சி உரைகளால் என் கண்களும், கருத்துக்களும் பிரகாசம் பெற்றன. இனி, நான் தங்கள் கட்டளைப்படியே நடக்கச் சித்தமாய் இருக்கிறேன்.

இராஜன்:- அன்பே! நான் உன்னையும், உனக்குக் கணவனாக வரப்போகும் விஸ்வனையும் என் மனமாரப் பாராட்டுகிறேன்! நீ மறுத்துக் கூறாமல் சென்று அவனையே மணந்து கொள்ளவேண்டும்!! நாமும், மிருக இச்சைக்கு ஆளாகும் பேதைகளைப் போல் வேதனையோ, பிடிவாதமோ அடையக்கூடாது என்பது ஞாபகமிருக்கட்டும்...! உம்...!! போய்வா விமலா...!!!

விமலா:- [அழுதுகொண்டே செல்கிறாள்]

### காட்சி 13.

[சாலை]

உறுப்பினர்:- புரட்சிக் கவிஞர்.

கதை:- [பாடிக் கொண்டே செல்கிறார் ஓர் கவி]

புரட்சிக் கவிஞர்:- (8) [பாட்டு 'விபவ சுகுண தேவா...' என்ற மெட்டு]

விதிதனை நம்பலாமா
பேதமற ஓது மாந்தர்...(வி)
ஞாயமில்லா மானிடரே
ஞாயமிருந்தும் ஈனமதேன்
தலை விதியோ மேலதுவோ
மதியிலாத சதியாமல
அழுவானேன்...(வி)

### காட்சி 14.

[முதலியார் வீடு]

உறுப்பினர்:- முதலியார், பத்மா, விமலா, விஸ்வன், சின்னான், சின்னாயி, விருந்தினர், விஸ்வன் நண்பர்கள், கச்சேரிக்குழு.

கதை அமைப்பு:- [கட்டாயக் கலியாணப் பந்தலில் பாட்டுக் கச்சேரியும் நடை பெறுகிறது. சோகமே உருவாய்க் கண்ணீர் உகுத்துக் கொண்டு விஸ்வன் அருகிலிருக்கும் விமலாவின் கழுத்திலும் மலர் மாலை தொங்குகிறது. மாப்பிள்ளைக் கோலத்திலிருக்கும் விஸ்வனை அவனுடைய நண்பர்கள் வந்து பார்க்கின்றனர், பரிசுகளும் கொடுக்கின்றனர்.

முதலியார் விருந்தினரை வரவேற்று உபசரிக்கிறார். பத்மா விமலாவின் பக்கத்தில் நிற்கிறாள். சின்னானும், சின்னாயியும் சுறுசுறுப்பாய் இருக்கின்றனர்]

பாகவதர்:- (9) [பாட்டு 'தாயே ஏழைபால்...' என்ற மெட்டு]

(பைரவி)

தோழா கோழைபோல்
தொலை செல்வாயோ-இன்பத்
திராவிடம் திராவிடர்
அடைய முடியாதலவே...(தோ)
நீயேன் உன்பாலன்றி டில்லி
செல்வாய்.........
நிமிர்ந்துனது தனியரசு
புரியும் வகை
அறிந்து ஆவன செய்வதலாது-
இன்பத்.........(தோ)
மன்னாதி மன்னரெல்லாம்
வந்து வந்து
மட்டில்லாப் போராடி
தோற்று விட்டும்
முந்நாளில், அக்பர்
அசோகன் படை
மோதி இனி முடியாது
எனும்படி
ஓடி ஒழிய திராவிடர்
நாடாண்டனர்.........(தோ)

### காட்சி 15.

[சாலை]

உறுப்பினர்:- இராஜன்.

கதை அமைப்பு:- [இராஜன் விமலாவை நினைந்து வருந்துகிறான்.]

இராஜன்:- (10) [பாட்டு 'கியா சித்தம் ஹை...' என்ற மெட்டு]

நேசித்தவளைத் தள்வதோ
நீதமதோ
நான் நித்தம் இனி
வாழ்வதில் ஏதாவதோ...(நே)
அன்பே எந்தன் இன்பம்
வீணே மாய்ந்த தந்தோ
அய்யோ பெரும் பொய்யோ
காதல் வாழ்வும் ஏதாம்
காதல் இன்றேல் சாதல்
அன்றோ உய்வேதினி
நான் நித்தம் இனி
வாழ்வதில் ஏதாவதோ...(நே)

### காட்சி 16.

[விமலாவின் படுக்கை அறை]

உறுப்பினர்:- விமலா, விஸ்வன், பத்மா, முதலியார்.

கதை அமைப்பு:- [விமலா வருந்திக்கொண்டிருக்கிறாள்; விஸ்வன் போதையோடு சென்று உளறிவிழுகிறான்.]

விமலா:- (11) [பாட்டு 'விதிசெய்த சூழ்ச்சி...' என்ற மெட்டு]

சதி செய்யும் மாந்தர்
தம்முள் ஏன் பிறந்தேனோ
சமுதாயச் சூதேனோ
பெண் உரிமையும் வீணோ...(ச)
மாதர்கள் படும் கேடதனை
நாடறியாதோ
காதல் வாழ்விழந்தேனே
என் வாழ்வினி வீணே...(ச)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஏதிராவிடமே! பெண்ணை
அடிமை செய்யல்
ஆதுமோ உன் கொடுமை
சகியோமே...(ச)

விமலா:- [போதையோடு வருகிறான்] அடியே...விமலா... தூங்கிறியா... அஹ்ஹஹ்ஹஹ்...

விமலா:- [விம்மி அழுகிறாள்]

விஸ்வன:- ஏண்டி ... ஏங்குறே...? நூ...ம்! தூங்குவியா...! சோக்கான...குட்டிடி...நீ அடி! எ பு து சே ...நான்...உன் புருஷண்டி...இதோ! புரியலை? ப்பூ! இவ்வளவு தானா...? என்னமோ படிச்சவள் கிடிச்சவள்னாங்களே......? அப்படின்னா...முத்தம்டி...முத்தம்?

[என்று விமலாவைக் கட்டிப் பிடிக்க முயல்கிறான்.]

விமலா:-[பயந்து விலகுகிறாள்.]

விஸ்வன்:-[தடாலென்று கீழே விழுகிறான்.]

பத்மா & முதலியார் } [சத்தம் கேட்டு ஓடி வருகின்றனர்]
என்னது...? என்ன சத்தம்...?

முதலியார்:-அடடடா...? விமலா! இதெல்லாம் என்னம்மா?

விமலா:-எல்லாம் நீங்கள் செய்த தீவினை தான்!

பத்மா:-என்னடி தீவினை? ஒரு ஆண்பிள்ளையை அதுவும் உன் புருஷனென்றுகூடக்கவனிக்காமல் கீழே பிடித்துத் தள்ளிவிட்டுக் குத்துக் கல்லாட்டம் நிக்கிறியே! என்ன ராங்கிடி உனக்கு...?

விமலா:-அப்பா...! அவர்தான் ...குடி வெறி...

பத்மா:- ச்சீ! வாயை மூடடி வாய்ப்பட்டி! அவன் என்ன செய்தாலும்...உன் கணவனாச்சேடி...! கல்லானாலும் கணவன்! புல்லானாலும் புருஷண்டி புருஷன்!!

முதலியார்:- கர்மம்! கர்மம்!! [என்று தலையிலடித்துக் கொண்டு போகிறார்.]

பத்மா:- இந்தாங்க! உங்களைத் தானே! இப்படியேவா போட்டு விட்டுப் போகிறது? தூக்கி மஞ்சத்திலாவது கிடத்தி விட்டுப் போகலாம் ஒரு கைபிடிவாங்க...ஏண்டி உலக்கை மாதிரி நிக்கிறே...?கூடத் தூக்கேண்டி...

[மூவரும் கூடி விஸ்வனைத் தூக்கி மஞ்சத்தில் போடுகின்றனர். பிறகு பத்மாவும், முதலியாரும் போகின்றனர்.]

விமலா:- [விஸ்வனைப் பார்த்து விட்டுத் தன் வாழ்க்கையை நினைந்து பொங்கிப் பொங்கி அழுது கொண்டிருக்கிறாள்.]

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு சம்பவங்களையும் சீர் தூக்கிச் சிந்தித்துப்பாருங்கள்.

சென்னை அரசாங்கம் வைத்திருக்கும் "விபசாரத்தடைச் சட்டத்தின்படி குற்றவாளியாயிற்றே இங்கு கூறப்படும் கடவுள். இவருக்குச் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கவேண்டுமே! இவ்வளவு கீழ்த்தரமான நடத்தையுள்ள ஒருவனைக் கடவுள் எனக் கூற முடியுமா?

விபசாரத்தை ஒழிக்கவேண்டுமென்று சட்டமியற்றி யிருக்கும் அரசாங்கம், கடவுள் விபசாரம் செய்ததாகவும், பெண்களின் கற்பழித்ததாகவும் கூறும் புராணங்களையும், இச் செயல் கடவுள் செய்ததாக ஆண்டுதோறும் பல ஊர்களில் நடக்கும் விழாக்களையும் ஒ.ழிக்க வேண்டும் தடை செய்து. மதுவிலக்குக் கொண்டு வந்ததும், "கள் குடிக்கும் காட்சிகளையும், கள் குடித்ததால் மயக்கமடைந்து இருப்பது போன்ற காட்சிகளையும் சினிமாப் படங்களில் காட்டக்கூடாது என்று தடை செய்தது போல.செய்யுமா? இதனை. அவ்வளவு மனத் துணிவுண்டா? ஒரு சுய நலக் கூட்டத்துக்கு வளைந்து கொடுத்து வாழும் அமைச்சர் அவைக்கு. ஒருக்கால் சட்டசபையில், உறுப்பினரொருவர் விபசாரச் தடைச் சட்டத்துடன் சேர்க்க" "விபசார விழா—புராண ஒழிப்பு என்கிற மசோதா ஒன்று கொண்டு வந்தால், ஒழுக்கங்கெட்ட ஒரு சுயநலக் கூட்டத்தினரான வைதீக வர்ணாச்சிரம வைத்திய நாதய்யர்களும், வரதாச்சாரிகளும் ஆரிய தாசர்களான தமிழ்ப் பண்பறியாத தன்மானங்கெட்ட வைதீகப் பிச்சுகளும் கிளம்பி "ஆஹா! நம் நாடு கோயில், புராண, இதிகாச விழாக்களால் தான் சிறப்படைந்திருக்கிறது. அவைகளை ஒழிப்பதா!-தடை செய்வதா! கூடாது! கூடாது!! அதனால் நம் நாட்டுக்கே—அல்ல, உலகத்திற்கே பெருங்கேடு ஏற்படும்" என ஆர்ப்பாட்டம் செய்வர் சட்டசபையில். யோசிப்பர் மதியூக மதி மந்திரிகளும் உறுப்பினர்களும், "மனிதர்கள் விபசாரம் செய்யக் கூடாது, ஆனால் கடவுள் செய்பலாம், விபசார விழாக் கொண்டாடலாம், இவ் விபசாரத் தடைச் சட்டம் கடவுளையும், புராணங்களையும், விழாக்களையும் கட்டுப்படுத்தக் கூடாது" என்று தள்ளிவிடுவர் அதனை. வாசகர்கள் நினைக்கலாம்! "கடவுள் விபசாரம் செய்ததாக அபாண்டமாக-ஆபாசமாகக் கூறும் புராணங்களையும்—நடக்கும் விழாக்களையும் தடைசெய்யாமலிருப்பார்களா! விபசாரத்தடைச் சட்டம் பிறப்பித்த அமைச்சரும் உறுப்பினர்களும்" என்று.

வாசகர்களை சந்தேகத்திற்கு ஆளாக்க விரும்பவில்லை. ஆதலால், ஆட்சியாளரின் மிகமிகப் பிற்போக்கான—மந்தமதிக்கு ஓர் எடுத்துக்காட்டு: 1947ம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து 16 மாவட்டங்களில் "மதுவிலக்கு" கொண்டு வந்தனர். அதாவது கள், சாராயம் போன்ற போதைதரும் குடிவகைகளை யாரும் அருந்தக் கூடாது என்று. ஆனால் ஜில்லா கலெக்டரிடம் அனுமதி பெற்று கள்ளிறக்கி, அறிவிற்சிறந்தவன்—உலகைப்படைத்தஉத்தமன் எனப் போற்றப்படும் (குடிகாரக்) கடவுளுக்குக் கள் படைக்கலாம் என்று, இதற்கான விதிகளைச் சர்க்கார் செய்திருக்கின்றனர் [பின்னர் சில திங்களுக்குப்பின் இதை ரத்து செய்து விட்டனர்.] கடவுள் கள் குடிக்கிறார் என்பதை அமைச்சர்ளும் நம்பி ஒப்புக்கொண்டு.

மக்களுக்கு உதவாது என்று தடை செய்த ஒரு தீயபழக்கத்தை-குடிப்பதற்குக் கள்ளில்லாமல் கடவுள் கஷ்டப்படக்கூடாது என்று தானே மது விலக்கிலிருந்து விதிவிலக்களித்திருக்கிறது கடவுளுக்கு மட்டும். கடவுளைக்குடிகாரனாக—மனிதனைவிட இழிதன்மை கொண்டவனாக ஒப்புக்கொள்ளும் ஆட்சியாளர்கள், அவனைக் காமாந்தகாரனென ஒப்புக்கொள்ளாது என்று எப்படிக்கூற முடியும். விபசாரத்திற்குத்தடைச் சட்டம் நாட்டிலே நடமாடினாலும் கடவுளை அது கட்டுப் படுத்தாத வகையில், விதி அமைத்து விட மாட்டார்களா? அமைச்சர்கள். அவ்வளவு கடவுள் பற்றற்ற

வர்களா அவர்கள்!

தமிழனின் பண்பறியா மந்திரிகள் தானே இன்று ஆளுகின்றனர். கோயிலில் காணப்படும் நடராச உருவம் பார்ப்பன உருவம். அதற்குத் தங்கள் பழக்கவழக்கமான, மதுவருந்தி மங்கையரிடம் ஆடும் களிபாட்டங்களையும், அப்படியே ஆண்டவன் பேரில் சுமத்திவிட்டனர். அறிவிழந்த தமிழகம் ஏற்றுக்கொண்டது அதனைத் தங்கள் கடவுளென்று. மதிகெட்ட தமிழனே! சிந்தனாசக்தி சிறிதுமின்றிக் கண்டதை ஒப்புக்கொள்ளும் கருத்திழந்த தமிழனே! உலக மக்களுக்கெல்லாம் கடவுளெனப்படும் நடராசருக்கு பூணூல்(கிராஸ் பெல்ட்) ஏனப்பா? பூணூல் போடுவது உன்பழக்கமா? உனக்கு உண்டா? தாழ்த்தப்பட்டிருக்கும் ஆதித் திராவிடருக்குண்டா? அது ஒரு சுயநலக்கூட்டத்தின் சின்னமல்லவா? உன்னுடைய கடவுள் காமாந்தகாரனா? கொலைகாரனா? சூதாடியா? திருடனா? அல்ல—அல்ல, உன்னுடைய கடவுளை எல்லா நாடுகளும், எந்தகாலத்தும் நாஸ்திகர் எனப்படுவோராலும், விரும்பிப்போற்றக்கூடியதாயிற்றே! ஆம். அதுதான் அன்பு—அறிவு அறம். (அறம் என்பது மோட்ச உலகிற்கு செல்ல வாங்கும் டிக்கெட் (சீட்டு) அல்ல, மனிதரின் ஒழுக்கம்-கடமை)

உலக அறிவியல் நூலாக, பல நாடுகளிலும் திகழ்ந்து தமிழனுக்குச் சிறப்பை அளித்து வருகிறதே (தமிழ் மறை) திருக்குறள். அது கூறுகிறது அறிவிற்சிறந்தவன்—மனத்திற்கு அப்பாற்பட்டவன்—வேண்டுதல் வேண்டாமை இலான்-அற ஆழி அந்தணன் தான் கடவுள் என்று. எங்கே, உன் பகுத்தறிவு கொண்டு சிந்தித்துப்பார்! இக் காமாந்தகாரக் கடவுள்கள் உன்னுடையதுதானா? இம்மாதிரி விழா நாம் கொண்டாடுவது நேர்மையா! அறிவா! அன்பா, தமிழ்ப் பண்பா என்று.

அரசவேல்.

★

## நெரூர் கண்டிராத பெருங்கூட்டம்.

★

நெரூர் டிச 5.

இன்று இவ்வூர் திராவிடக் கழகத்தாரால் கூட்டப்பட்ட பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதலில் பாண்டு வாத்தியங்களோடு 100 தொண்டர்கள் சைகிளில் அணிவகுத்துச் செல்லவும் 3 குதிரையில் தொண்டர்கள் முன் செல்லவும் 100 கருப்புக்கொடி யேந்திய தொண்டர்கள் பின் செல்லவும் 2 மோட்டார்களில் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டனர். மாலை 5-மணிக்கு பகவதி அம்மன் கோவில் மைதானத்தில் கூடிய 5000 மக்கள் கொண்ட கூட்டத்திற்குத் தோழியர் கெ. பி. பழசியம்மாள் தலைமை தாங்கினார். தோழர்களான அப்பாவு, பாலகுரு, சி. பி. சிற்றரசு, வி. இராமசாமி, கெ. பாலையா, மா. இராசகோபாலன், தோழியர். குப்பம்மாள் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இம்மாதிரியான ஊர்வலமோ கூட்டமோ இதற்கு முன் இவ்வூரில் நடத்தப்படவில்லை என்று மக்கள் பெருமையாகப் பேசிக்கொள்வது கா. தோழர்களுக்குப் பெரும் பொறாமையையுண்டுபண்ணியிருக்கிறது.

## நடிகவேளுக்கு நன்றி!

கோவை டிச. 15-

சென்ற மூன்றுமாத காலமாய் இந்நகரில் சீர்திருத்த நாடகங்களை நடித்துவரும் நடிகவேள் தோழர் எம். ஆர். ராதா அவர்களின் கடைசி நன்றி கூறும் நாடகம் 15-12-48ம் தேதி, திருப்பூர் தோழர் எஸ். ஆர்.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நகரப் பிரமுகர்களுட்பட ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். நாடக இடையில் தலைவர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் தோழர் ராதா அவர்களைப் பாராட்டியும் "இனவுணர்ச்சியும் சமுதாயப் புரட்சியும் கொண்ட நாடகங்கள்தான் இனி நாட்டிற்குத் தேவை என்பதை வலியுறுத்திப் பேசினார். பின் ராதா அவர்களுக்கு ஒரு கல்லிழைத்த தங்க மோதிரம் ஒன்று பரிசளித்தார். தோழர் ராதா அவர்கள் பாராட்டியவர்களுக்குத் தக்கபடி நன்றி கூறினார்.

## வரப்பெற்றோம்.

### கடவுளால் ஆகாதது!

விலை அணா 0—8—0.
ஆசிரியர்: டி. கே. சீனிவாசன்.
கிடைக்குமிடம்:-
திராவிடன் பதிப்பகம்,
P. B. 18 வேலூர், வ. ஆ.

### அறப்போர்.

விலை அணா 0—3—0.
மு. கருணாநிதி பேச்சு.
வெற்றி வெளியீடு, திருவாரூர்.


## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.



Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59 Cutcherystreet, ERODE